# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 மாசி 02 திங்கட்கிழமை 15.02.2021 கதிர் 102



### இது ரகசியம் அல்ல!

அண்மைக்காலமாக – கொவிட் 19 தொற்றுக் காரணமாக, அமைச்சரவைக் கூட்டங்கள் மெய்நிகர் முறையில் – ஒன்லைனில் – நடந்து வந்தன.

ஆனால் இன்றைய அமைச்சரவைக் கூட்டம் நேரடியாக – அமைச்சர்களின் பக்கம்02 »

## நாட்டை முடக்குவது குறித்து இன்னும் தீர்மானம் இல்லை

### இராணுவத் தளபதி தெரிவிப்பு



நாடு பூராகவும் மீண்டும் ஊரடங்கு சட்டத்தை அமுல்படுத்துதல் தொடர்பில் வெளியாகியுள்ள செய்திகளில் உண்மையில்லை என்று கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரும் இராணுவத் 2

## முன்னாள் சபாநாயகர் லொக்குபண்டார கொரோனா வைரஸ் தொற்றால் மரணம்

முன்னாள் சபாநாயகர் டபிள்யூ.ஜே.எம்.லொக்குபண்டார நேற்றுக் காலமானார்.

கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளான நிலையில் கொழும்பு தேசிய தொற்று நோயியல் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த அவர், தனது 80 ஆவது வயதில் காலமானார்.

1941ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 5ஆம் திகதி ஹப்புத்தளைப் பகுதியில் பிறந்த லொக்குபண்டார, நாடாளுமன்றப் பிரவேசத்தை 1977ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடாகப் பெற்றுக்கொண்டார். நாடாளுமன்ற உறுப்பினர், 2



# காணாமல்போனோர் அலுவலகத்தை நடத்திச் செல்ல நாம் விரும்பவில்லை



## புலிகளுக்கு எவ்வாறு அரச நிதி ஒதுக்குவது? இப்படி கேள்வி எழுப்புகின்றது கோட்டா அரசு

காணாமல்போனோர் அலுவலகத்தை நடத்திச் செல்ல அரசு விரும்பவில்லை என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ரியர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார்.

அத்துடன் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு அரச நிதி ஒதுக்குவதை அரசால் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் அவர் குறிப்பிட்டார். 2

## மாணவர்களின் உடைகளைக் களைந்து பச்சை குத்தியுள்ளனரா எனச் சோதனை

### வலிகாமம் பாடசாலை குறித்து முறைப்பாடு

யாழ்ப்பாணம், பெப்.15

வலிகாமம் கல்வி வலயத்துக்கு உள்பட்ட பாடசாலை ஒன்றில் தரம் 11 பயிலும் மாணவர்கள் ஆசிரியர்கள் சிலரால் துன்புறுத்தலுக்கு உள்படுத்தப்பட்டுள்ளனர் என்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாணம் அலுவலகத்தில் முறைப்பாடு செய்யபட்டுள்ளது.

குறித்த பாடசாலையில் தரம் 11இல் பயிலும் மாணவன் ஒருவன் உடலில் பச்சை குத்தியுள்ளான் என ஆசிரியர்கள் சிலரால் அண்மையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதனால் தரம் 11இல் பயிலும் 70 ஆண் மாணவர்களை 2

## இலங்கைத் தமிழரின் சகல உரிமைகளையும் உறுதிப்படுத்த இந்தியா தொடர் நடவடிக்கை!

### தமிழகத்தில் மோடி உறுதி

இலங்கையில் உள்ள எங்கள் தமிழ்ச் சகோதர, சகோதரிகள் கண்ணியம், சமத்துவம், நீதி மற்றும் அமைதி எனச் சகல உரிமைகளுடன் வாழ்வதை உறுதி செய்வதில் நாங்கள் தொடர்ந்து நடவடிக்கைகளை எடுத்து வருகின்றோம். இதில் நாங்கள் எப்போதும் உறுதியாக இருக்கின்றோம்.

– இவ்வாறு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார்.

தமிழகத்தில் பல்வேறு அபிவிருத்தித் திட்டப் பணி 2



## ஜெனிவாவைக் கையாள சுமந்திரன் இல்லாத குழு தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒன்று கூடித் தீர்மானம்

### சம்பந்தனுக்கு ஒரு பிரதிநிதியை நியமிக்க இடம்



யாழ்ப்பாணத்தில் தனியார் விடுதி ஒன்றில் நேற்று நடைபெற்ற தமிழ்த் தேசியக் கட்சிகளின் கூட்டத்தில் ஜெனிவா விடயத்தைக் கையாள குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய கொழும்பில் உள்ள பல்வேறு நாடுகளின் தூதுவர்களுடனும், இணை அனுசரணை நாடுகளான பிரிட்டன், கனடா, ஜேர்மனி போன்ற நாடுகளுடனும் 11

## வடக்குக்குள் சீனக் கம்பனிகளா? தமிழ்க் கட்சிகள் போர்க்கொடி!

இந்தியாவின் பாதுகாப்புடன் தொடர்புடைய வடக்குப் பகுதியில் சீனக் கம்பனியைக் கொண்டு வருவது பலத்த பாதிப்புக்களை உருவாக்கும் என ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிறேமச்சந்திரன் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கட்சிகளின் கூட்டம் நேற்று யாழ்ப்பாணத்தில் தனியார் விடுதி ஒன்றில் இடம்பெற்றவேளையிலேயே ஊடகங்களிடம் இவ்வாறு அவர் கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது: –

யாழ்ப்பாணம் மாவட்டத்துக்குள் வரக்கூடிய நெடுந்தீவு, அனலைதீவு, நயினாதீவு போன்ற தீவுகளில் ஒரு மாற்று எரிசக்தியை உருவாக்குவதற்காக இலங்கை அரசு சீனக் கம்பனியுடன் ஒரு ஒப்பந்தத்தை 11

## நேற்றும் 801 பேருக்கு கொரோனா தொற்று

### 75 ஆயிரத்தைக் கடந்தது மொத்தப் பாதிப்பு

இலங்கையில் நேற்றும் 801 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதையடுத்து நாட்டில் கொரோனாத் தொற்றுக்கு உள்ளானோரின் மொத்த எண்ணிக்கை 75 ஆயிரத்து 654 ஆக அதிகரித்துள்ளது.

கடந்த கடந்த நான்கு மாத காலப்பகுதியில் மாத்திரம் 71 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர்.

2020ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல் ஒக்டோபர் மாதம் வரையில் நாட்டில் 2

## பூநகரி - வலைப்பாடு கிராமத்தில் 10 பேருக்கு கொரோனா தொற்று

### வடக்கில் நேற்று 12 பேர் அடையாளம்

கிளிநொச்சி மாவட்டம், பூநகரி – வலைப்பாடு கிராமத்தில் 10 பேருக்கு நேற்று கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது: –

யாழ். போதனா வைத்தியசாலை ஆய்வு கூடத்தில் நேற்று மேற்கொள்ளப்பட்ட 379 பேரின் பி.சி.ஆர். பரிசோதனை முடிவுகளின் அடிப்படையில் வடக்கு மாகாணத்தைச் 2



## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பிரசன்னத்துடன் – முன்னைய மாதிரி – நடைபெறவிருக்கின்றது. காரணம் உண்டு. இன்றைய அமைச்சரவைக் கூட்ட முடிவில் அமைச்சர்கள் எல்லோருக்கும் தடுப்பூசி போடப் போகின்றார்களாம்.

அமைச்சர்கள் எல்லோருமே தடுப்பூசி போட்டுக் கொண்டால் அதன் பின்னர் அமைச்சரவைக் கூட்டத்தை மெய்நிகர் முறையில் நடத்தத் தேவையில்லை, நேரடியாகவே நடத்தலாம் அல்லவா? அதுவல்லப் பிரச்சினை. அமைச்சர்கள் பலரும் வயதில் மூத்தவர்கள். உதாரணத்துக்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ 75 வயதைத் தாண்டியர். வயதில் மூத்த அமைச்சர்கள் தடுப்பூசியின் வீரியத்தை எதிர்கொள்ளும் வலுக் கொண்டவர்களா? தெரியவில்லை. பார்ப்போம் – என்ன நடக்கும் இன்று என்று...!

★ ★ ★

'கலியாணத்துக்கு அழைப்புக் கொடுத்தால், கலியாணம் முடிந்து, பிள்ளைக்குக் காது குத்துக்கு வருகை தந்த மாதிரி' என்பார்கள். அப்படி ஒரு சம்பவம்.

வடக்கில் மூன்று தீவுகளில் மின் உற்பத்தித் திட்டங்களை சீனாவுக்குக் கையளிப்பது என்ற கொழும்பின் முடிவு பற்றிய செய்தி கடந்த மாதம் நடுப்பகுதியில் வெளியானது. அது குறித்து எமது பத்திரிகையில் உடனேயே விவரமான கட்டுரையும் கூடப் பிரசுரமானது.

கொழும்பின் அந்த முடிவை இந்தியா கடுமையாக எதிர்த்தது. அந்தத் திட்டங்களுக்கான 12 மில்லியன் டொலர் (இலங்கை நாணயத்தில் சுமார் 240 கோடி ரூபா) நிதியை நன்கொடையாகத் தானே வழங்கி, திட்டங்களைத் தானே முன்னெடுக்கவும் முன்வந்தது. இந்தியாவின் கடும் எதிர்ப்பு மற்றும் திட்டங்களைத் தானே நன்கொடையாக வழங்கும் இந்தியாவின் பரோபகாரம் ஆகியவற்றின் அடிப்படையில் அத்திட்டங்களை இந்தியாவுக்கு வழங்கக் கொழும்பு இணங்கி விட்டது.

இந்தியத் தூதுவர் கோபால் பாக்லேயுடன் பேச்சு நடத்திய பின்னர் இந்த முடிவை இலங்கை மின்சக்தி அமைச்சர் டலஸ் அழகப்பெருமா அறிவித்தும் விட்டார்.

இதெல்லாம் நடந்தேறிய பின்னர் – இந்தப் பிரச்சினை சூடு பிடித்துத் தணிந்த பின்பு – இப்போது தமிழ்த் தேசிய கட்சிகள் எல்லாம் ஒன்று சேர்ந்து, தீவுப்பகுதியில் மின் உற்பத்தித் திட்டங்களை முன்னெடுக்கும் பொறுப்பை சீனாவிடம் ஒப்படைக்கும் கொழும்பின் நடவடிக்கையைக் கண்டிக்கும் தீர்மானத்தை நேற்றுக் கூடி எடுத்திருக்கின்றன.

இதை, கலியாணத்துக்கு வைத்த அழைப்புக்கு பிள்ளைக்குக் காதுகுத்துக்கு வந்த மாதிரி என்று சொல்வதில் தப்பில்லைத்தானே...?

★ ★ ★

ஜனாதிபதி கோட்டாபாயவுக்கு மிக நெருக்கமானது எனக் கருதப்படும் 'மோர்னிங்' ஆங்கில இதழ் நேற்று ஒரு தகவல் வெளியிட்டிருக்கின்றது. அது வாசகர்களுக்குச் சமர்ப்பணம். செய்தியின் சாரம் இதுதான்:–

ஐ.நாவுக்கு அடுத்து பெரிய சர்வதேச அமைப்பு என்று கருதப்படுவது 'இஸ்லாமிய ஒத்துழைப்புக்கான நிறுவனம்' (ஓ.ஐ.ஸி). அதில் 57 இஸ்லாமிய நாடுகள் இடம்பெற்றுள்ளன. அவை அனைத்தும் சேர்ந்து வரும் ஜெனிவா, ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில் கூட்டத்தில் இலங்கை அரசை ஆதரிக்கத் தீர்மானித்துள்ளன.

உலகின் மிகப்பெரிய இஸ்லாமிய அமைப்பு, ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில் கூட்டத்தில் இலங்கையை ஆதரிக்கும் முடிவை எடுத்தமை ஜெனிவா இராஜதந்திர வட்டாரங்களை ஆச்சரியத்தில் மூழ்கடித்துள்ளது.

கொவிட் தொற்றால் உயிரிழக்கும் அனைவரினதும் சடலங்களும் எரிக்கப்பட வேண்டுமே ஒழிய, அடக்கம் செய்யப்படக் கூடாது என்ற கொழும்பின் தீர்க்கமான – இறுக்கமான – முடிவை எதிர்ப்பது என்ற தீர்மானத்தில் இந்த இஸ்லாமிய நாடுகள் உறுதியாக இருந்தாலும் –

கொழும்புக்கு எதிராக மேற்கு நாடுகள் தனித்துக் கொண்டு வரும் பிரேரணையை ஒன்றுபட்டு எதிர்ப்பது என்ற தீர்மானத்தையும் அந்த இஸ்லாமிய நாடுகள் ஏற்கனவே எடுத்து விட்டன.

அடுத்த வாரத்தில் கொழும்பு வரும் பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான், இஸ்லாமிய நாடுகளின் இலங்கை சார்பு நிலைப்பாட்டை கொழும்பில் வைத்து அறிவிப்பார் என்றும் கூறப்பட்டது.

– இவ்வாறு அந்த ஆங்கில இதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தச் செய்தியின் உண்மைத்தன்மை தெரியவில்லை. செய்தி உண்மையானால் ஜெனிவா விவகாரத்தில் கொழும்பு பக்கமும் காற்று வீசத்தான் செய்கின்றது என்பதை மறுக்க முடியாது என்பதுதான் நிலைவரம்.

ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் உறுப்பு நாடுகளின் எண்ணிக்கை 47.

இலங்கை நிலைமை தொடர்பாக மேற்படி ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் சமர்ப்பிக்கவிருக்கும் அவதானிப்பு அறிக்கையின் உள்ளடக்கம் வெளியான போது சீனா, பாகிஸ்தான் உட்பட எழு நாடுகளே இலங்கைக்கு ஆதரவாக நிற்கும் என எதிர்வு கூறப்பட்டது.

ஆனால் இஸ்லாமிய ஒத்துழைப்புக்கான நிறுவனம் இலங்கை சார்பு நிலைப்பாட்டை ஒன்றித்து எடுக்குமானால் இம்முறை ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கையை ஆதரிக்கும் நாடுகளின் எண்ணிக்கை ஒரேயடியாக இருபதாக உயரும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

– மின்னல் –

## பூநகரி - வலைப்பாடு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சேர்ந்த 12 பேர் உள்ளிட்ட 17 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு தொற்று உறுதியானவர்களில் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த 10 பேரும் அடங்குவர்.

கிளிநொச்சி மாவட்டம், பூநகரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட வலைப்பாடு கிராமத்தில் முன்னதாக ஒருவருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்ட நிலையில் அவருடன் நெருங்கிய தொடர்பில் இருந்தவர்கள் அடையாளம் காணப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டிருந்தனர்.

இவ்வாறு தனிமைப்படுத்தப் பட்டிருந்தவர்களில் 10 பேருக்கே நேற்று பி.சி.ஆர். பரிசோதனையில் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

குறித்த 10 பேரும் முன்னர் தொற்று உறுதி செய்யப்பட்டவரின் உறவினர்களாவர்.

இதேவேளை, வவுனியா மாவட்டத்தில் ஒருவருக்கும், மன்னார் மாவட்டத்தில் ஒருவருக்கும், வவுனியா தனிமைப்படுத்தல் நிலையங்களில் 5 பேருக்கும் நேற்று தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது – என்றார்.

## முன்னாள் சபாநாயகர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பிரதி அமைச்சர், அமைச்சர், சப்ரகமுவ மாகாண ஆளுநர், சபாநாயகர் எனப் பல்வேறு பதவிகளை அவர் வகித்தார்.

2004ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 22ஆம் திகதி முதல் 2010ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 8ஆம் திகதி வரை இலங்கை நாடாளுமன்றத்தின் 18ஆவது சபாநாயகராக லொக்குபண்டார பதவி வகித்தார்.

அதன்பின்னர் 2010ஆம் ஆண்டு முதல் 2015ஆம் ஆண்டு வரையில் சப்ரகமுவ மாகாணத்தின் ஆளுநராக அவர் பதவி வகித்தார்.

கடந்த வாரம் கொரோனாத் தொற்றுக்கு உள்ளான அவர், கொழும்பு தேசிய தொற்று நோயியல் வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டிருந்தார். இந்தநிலையில், நேற்று மாலை அவர் காலமானார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## மாணவர்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பாடசாலை வளாகத்திலுள்ள மறைவான இடம் ஒன்றுக்கு அழைத்த ஆசிரியர்கள், வலுக்கட்டாயமாக ஆடைகளை களையுமாறு அவர்களை அறிவுறுத்தியுள்ளனர்.

ஆசிரியர்களின் அறிவுறுத்தலை மீற முடியாமல் தாம் அந்தச் சித்திரவதைக்கு உள்ளாகினர் என மாணவர்கள் தமது பெற்றோரிடம் தெரிவித்துள்ளனர்.

தாம் உளரீதியாக பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும், தமக்கு இழைக்கப்பட்ட அநீதி தொடர்பில் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்து மாணவர்களால் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாணம் பிராந்திய அலுவலகத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

மாணவர்களின் முறைப்பாடு கடந்த 11ஆம் திகதி வியாழக்கிழமை கிடைத்தது. சம்பவம் தொடர்பில் மாகாண கல்வி அமைச்சிடம் விளக்கமளிக்குமாறு எழுத்துமூலம் கோரப்பட்டுள்ளது – என்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் இணைப்பாளர் தெரிவித்தார்.

## இலங்கைத் தமிழரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

களை தொடங்கி வைப்பதற்காக பிரதமர் மோடி நேற்று அங்கு விஜயம் செய்தார். அங்கு மெட்ரோ ரயில் திட்டம், மின்சார ரயில் திட்டம், கல்லணைத் திட்டம், அர்ஜுன் பீரங்கி தயாரிப்புத் திட்டம் என்பனவற்றை அவர் தொடக்கி வைத்தார். இதன்போது உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

உலகின் தொன்மையான மொழி 'தமிழ்' என்று கூறிய அவர், 'வணக்கம் சென்னை', 'வணக்கம் தமிழ்நாடு' என்று கூறி உரையை ஆரம்பித்தார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது: –

இலங்கையில் தமிழ்ச் சகோதர, சகோதரிகள் அதிகம் வாழும் பகுதியான யாழ்ப்பாணத்துக்குச் சென்ற ஒரே ஒரு இந்தியப் பிரதமர் நான் மட்டுமே. அதேபோல் அங்கு வாழும் தமிழ் மக்களின் நலன் குறித்து அரச தலைவர்களிடம் வலியுறுத்தும் ஒரே ஒரு மத்திய அரசும் நாமே.

இலங்கை வாழ் தமிழ்ச் சகோதர, சகோதரிகள் மீது எமது அரசு தொடர்ந்து அக்கறை செலுத்தி வருகின்றது. இலங்கைத் தமிழர்கள் கண்ணியம், சமத்துவம், நீதி மற்றும் அமைதி எனச் சகல உரிமைகளுடன் வாழ்வதை நாங்கள் உறுதி செய்வோம்.

இலங்கையில் வடக்கு, கிழக்கு இடம்பெயர்ந்த தமிழர்களுக்க சுமார் 50 ஆயிரம் வீடுகளை மத்திய அரசு கட்டிக்கொடுத்துள்ளது. மலையகத் தமிழர்களுக்கு 4 ஆயிரம் வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. அத்துடன் அம்புலன்ஸ் சேவைக்கும் இந்தியா உதவி செய்துள்ளது.

சென்னை – யாழ்ப்பாணம் இடையிலான விமான சேவையும் தொடங்கப்பட்டுள்ளது. இந்தியா கட்டிக் கொடுத்த யாழ்ப்பாணம் கலாசார மையம் விரைவில் திறக்கப்படவுள்ளது

நமது மீனவர்கள் நீண்டகாலமாகப் பிரச்சினைகளைச் சந்தித்து வருகின்றனர். தமிழக மீனவர்களின் நியாயமான உரிமைகளை மத்திய அரசு பாதுகாக்கும். அதனை மத்திய அரசு ஒருபோதும் விட்டுக் கொடுக்காது.

இலங்கை அரசால், தமிழக மீனவர்கள் கைது செய்யப்பட்டாலும், அவர்கள் விரைவாக விடுதலை செய்யப்படுவதை உறுதி செய்துள்ளோம். 1,600 மீனவர்களை மீட்டுள்ளோம். தற்போது இலங்கைச் சிறைகளில் தமிழக மீனவர்கள் எவரும் இல்லை. மேலும், மீனவர்களில் 312 படகுகள் மீட்கப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள தமிழக மீனவர்களின் படகுகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது – என்றார்.

## நேற்றும் 801 பேருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மூவாயிரம் வரையிலானா தொற்றாளர்களே அடையாளம் காணப்பட்டிருந்தமையுடன் 13 பேரே தொற்றால் உயிரிழந்திருந்தனர்.

இந்தநிலையில், மினுவாங்கொடை ஆடைத்தொழிற்சாலை மற்றும் பேலியாகொட மீன் சந்தைக் கொத்தணிகளைத் தொடர்ந்து நாளாந்தம் தொற்றுக்கு உள்ளான 500 இற்கும் மேற்பட்டோர் அடையாளம் காணப்பட்டு வருகின்றமையுடன், நாளாந்தம் மரணங்களும் பதிவாகி வருகின்றன.

இதேவேளை, கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகியிருந்தவர்களில் 865 பேர் நேற்று குணமடைந்துள்ளனர் எனவும் அரச தகவல் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்றில் இருந்து இதுவரை 68 ஆயிரத்து 696 பேர் குணமடைந்துள்ளதுடன், 6 ஆயிரத்து 568 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

## காணாமல்போனோர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது: –

இராணுவத்தைக் கொன்ற, தேசிய பாதுகாப்பைப் பலவீனப்படுத்திய நபர்களுக்கு நட்டஈடு கொடுக்க நாம் அனுமதிக்க முடியாது. பயங்கரவாதிக்கு நியாயத்தைப் பெற்றுக்கொடுத்து தேசத்தைக் காப்பாற்றியவர்களைத் தண்டிக்கக் கூறுவதில் என்ன நீதி உள்ளது என நாம் கேள்வி கேட்கின்றோம்.

எமக்கு எதிரான போர்க்குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் நாம் பொறுப்புக்கூறலில் இருந்து விடுபட்டுள்ளோம் எனக் குறிப்பிட்டு தொடர்ச்சியாக எமக்குப் பாடம் கற்பிக்கவே ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழு முயற்சித்து வருகின்றது.

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பில் சிறுவர்கள் இணைத்துக்கொள்ளப்பட்ட போதும், பொதுமக்களைப் பணயம் வைத்துப் போர் நடத்தப்பட்ட போதும் மனித உரிமைகள் குறித்து பேசாதவர்கள் இன்று இராணுவம் மீதான குற்றச்சாட்டை முன்வைத்து வருகின்றனர்.

அதேபோல் எமது தேசிய விசாரணை பொறிமுறைகளுக்கு சர்வதேசம் இடமளிக்க வில்லை. உள்ளக அறிக்கைகளை நாம் முன்வைத்தால் அது பக்கச்சார்பானது என நிராகரிக்கின்றனர். அப்படியென்றால் எவ்வாறு நாம் முகங்கொடுப்பது?

இந்தநிலையில், இம்முறை ஐ.நா. மனித உரிமைகள் சபையில் பிரிட்டன் தலைமையில் ஐந்து நாடுகள் கொண்டு வரும் பிரேரணையை நிராகரித்து, இலங்கை புதிய பிரேரணை ஒன்றை முன்வைக்கும் வாய்ப்புகளே அதிகமாக உள்ளன – என்றார்.

## நாட்டை முடக்குவது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

எனினும், புதிய வகை கொரோனா வைரஸ் தொடர்பில் ஆய்வுகள் நடந்து வரும் நிலையில் சுகாதாரத் துறையின் அறிவுறுத்தலுக்கு அமைய வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த தேவையான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் எடுக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

பிரிட்டன் உள்ளிட்ட நாடுகளில் அடையாளம் காணப்பட்டுள்ள அதிக வீரியத்துடனான புதிய வகை கொரோனா வைரஸ் இலங்கையிலும் பரவியுள்ளது என ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் மருத்துவ ஆய்வுப் பிரிவினரால் அண்மையில் அறிவிக்கப்பட்டிருந்தது.

இதனைத் தொடர்ந்து கடந்த நாள்களில் நாட்டின் சில பகுதிகளில் புதிய வகை வைரஸ் தொற்றுடன் நபர்கள் அடையாளம் காணப்படுகின்றனர் என்று பல்கலைக்கழகத்தின் மருத்துவ ஆய்வுப் பிரிவு மேலும் தெரிவித்திருந்தது.

இந்தநிலையிலேயே , இலங்கையில் அதிக வீரியத்துடனான புதிய வகை கொரோனா வைரஸ் பரவல் மற்றும் நாளாந்தம் அதிகரிக்கும் தொற்றாளர் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு நாடு பூராகவும் மீண்டும் ஊரடங்குச் சட்டத்தை அமுல்படுத்த வேண்டிய தேவை உள்ளதா என்பது தொடர்பில் கொரோனாத் தடுப்புச் செயலணிக் கூட்டத்தில் கலந்துரையாடப்படும் என்று பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார் என்று 'சண்டே டைம்ஸ்' செய்தி வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# தேவநம்பியதீசன் காலத்துக்குப் பின்பே இலங்கைக்குப் பௌத்த மதம் வந்தது!

## யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் இடித்துரைப்பு

தேவநம்பியதீசனின் காலத்தின் பின்னரே இலங்கைக்கு பௌத்த மதம் வந்தது என்றும் தமிழர்களே இந்த மண்ணின் பூர்வீகக் குடிகள் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்துள்ளார்.

வாதரவத்தை பொதுநோக்கு மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற மக்கள் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் –

நாம் இந்த மண்ணிலே நாளுக்கு நாள் வெவ்வேறான பிரச்சினைகளைச் சந்தித்துக்கொண்டிருக்கின்றோம். பொழுது விடிவதே எங்கள் மக்களின் நிலங்களையும் வாழ்வையும் அரச இயந்திரங்கள் கபளீகரம் செய்கின்ற செய்திகளுடனேதான்.

தொல்லியல் என்ற பெயரில் எங்கள் தொன்மதங்கள் அழிக்கப்பட்டுக்கொண்டு இருக்கின்றன. சிவலிங்க வழிபாடு மேற்கொண்ட இடங்களை எல்லாம் புத்தர்



சிலை இருந்தது எனக் கூறி எங்கள் வழிபாட்டு உரிமையை கேள்விக்கு உள்ளாக்குகின்றது.

எங்கள் கலாசார பண்பாட்டு விழுமியங்கள் நவநாகரிகம் என்ற பெயரில் இல்லாமல் போகிறது.

இளைஞர்கள் போதைப் பொருள் பாவனைக்கு அடிமையாகிறார்கள். இலங்கை நாட்டின் முப்படைகளும் ஆயுதங்களோடு வடக்கு கிழக்கில் தமிழ் மக்களின் காணிகளை சுவீகரித்து வைத்திருக்கின்றார்கள்.

எந்த இடத்திலும் இல்லாதவாறு தமிழர்களின் இடங்களில் ஆயுதப்படைகள் குவிக்கப்பட்டிருக்கின்ற நிலையிலும் எவ்வாறு போதைப்பொருள் எமது இளைஞர்களுக்கு கிடைக்கிறது. எங்கள் இளைஞர்களின் சிந்தனையை இனம் பற்றி சிந்திக்கக் கூடாது என்ற நோக்கில் எங்கள் இளைஞர்களை வேறு திசைகளுக்குத் திருப்புகின்ற செயற்பாடுகள் கனகச்சிதமாக திட்டமிட்டு அரங்கேற்றப்படுகின்றன.

இலங்கைக்கு பௌத்த மதம் என்பது தேவநம்பியதீசன் காலத்திலேதான் வந்தது. அதற்கு முன்னர் இங்கு இராவணன் என்ற சிவபக்தன் இந்த இலங்கையை ஆண்டிருக்கிறார்.

தேவநம்பியதீசன் காலத்துக்கு முன்பாக ஆண்ட மன்னர்கள் எல்லோரும் இந்துப் பண்பாட்டுடன்தான் ஆண்டிருக்கிறார்கள்.

தமிழ் மன்னர்கள் இந்த நாட்டை ஆண்டார்கள் என்பதைக்கூட பாடப்புத்தகங்களில் இணைக்க சிங்கள கல்வித் துறை தயாராக இல்லை பண்டாரவன்னியன், கையிலை வன்னியன், சங்கிலியன், பல்லவன், அக்கிராசன் போன்ற மன்னர்கள் ஆண்டார்கள் என்பதைக்கூட வரலாற்றுப் புத்தகத்தில் போடுவதற்குத் தயாராக இல்லை.

இதனால்தான் தலைவர் பிரபாகரன் தமிழீழ கல்வி கழகத்தின் பொறுப்பாளர் பேபி சுப்பிரமணியம் ஊடாக தமிழீழ வரலாறு என்னும் பாடம் பாடசாலைகளில் கற்பிக்கப்பட்டது.

சிவவழிபாடு மிகச்சிறந்த முறையில் இங்கு நடை பெற்றிருக்கிறது என்பது திருமூலர் இலங்கையை சிவபூமி என்று அழைப்பதன் மூலமே தெளிவாகிறது.

தேவநம்பிய தீசனின் தந்தையின் பெயர்கூட மூத்த சிவன் என்பதுதான். சிவன் என்பது தமிழர்களின் கடவுளின் பெயரையே குறிக்கிறது.

தீசன் சிவன் போன்ற பெயர்கள் இப்போதும் தமிழர்கள் மத்தியில் இருக்கிறது. இந்த நாட்டினுடைய வரலாறு எவ்வாறு திரிபுபடுத்தப்படுகிறது என்பது இதில் இருந்தே தெளிவாகிறது. – என அவர் மேலும் தெரிவித்தார்.

# 4 பிள்ளைகளின் தந்தை நாவலடி விபத்தில் சாவு!

மட்டக்களப்பு – கொழும்பு பிரதான வீதியின் நாவலடிப் பகுதியில் இடம்பெற்ற விபத்தொன்றில் ஒருவர் உயிரிழந்துள்ளார் என வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 2 மணியளவில் இடம்பெற்ற இந்த விபத்தில் ஏறாவூர் ஜாமியுல் அக்பர் ஜும்மாப் பள்ளி குறுக்கு வீதியை அண்டிய பகுதியில் வசிக்கும் 62 வயதுடைய நான்கு பிள்ளைகளின் தந்தையொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

தான் பயணித்த டிப்பர் ரக வாகனத்தை வீதியின் ஓரத்தில் நிறுத்திவிட்டு, அதன் அருகில் நின்றுகொண்டிருந்த இவர் மீது லொறியொன்று மோதியுள்ளமையாலேயே இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

விபத்தையடுத்து காயமடைந்த அவர், அயலவர்களின் உதவியுடன் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலைக்குக் கொண்டு செல்கையில் உயிரிழந்துள்ளார்.

விபத்தை ஏற்படுத்திய லொறியின் சாரதியை கைது செய்துள்ள பொலிஸார் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

# தமிழர் உரிமைகளை நசுக்கும் விதமாகவே சரத் வீரசேகரவின் செயற்பாடு அமைகிறது!



## கஜேந்திரன் எம்.பி. காட்டம்

தமிழ் மக்களின் உரிமைக் கோரிக்கைகளை நசுக்கும் விதமாகவே சரத் வீரசேகரவின் செயற்பாடுகள் காணப்படுகின்றன என அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

இலங்கை நாடாளுமன்றத்தில் விடுதலைப் புலிகள் மற்றும் பிரபாகரன் குறித்து பேசுவதற்கு இனி ஒருபோதும் அனுமதிக்க முடியாதென பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ரியல் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் சரத் வீரசேகரவின் கருத்துக்கு பதிலளிக்கும் வகையில் பி.பி.சி. செய்தி பிரிவுக்கு இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக செல்வராசா கஜேந்திரன் மேலும் கூறியுள்ளவை வருமாறு –

அமைச்சர் சரத் வீரசேகர, மோசமான இனவெறி சிந்தனைக்குள் புதைந்துள்ளார்.

ஆகவேதான் இவ்வாறான கருத்துக்களை அவர் வெளியிட்டு வருகின்றார். இலங்கையில் 30 வருட காலம் இடம்பெற்ற யுத்தத்தின் போது, தமிழர்கள் மீது இலங்கையின் முப்படைகளே தாக்குதல்களை நடத்தின.

ஆகவேதான் இலங்கை அரச படைகள் மற்றும் இலங்கை அரசாங்கத்தின் மீது யுத்தக் குற்றச்சாட்டுக்கள் காணப்படுகின்றன. அதனை சரத் வீரசேகரவும் எதிர்கொள்ள வேண்டும்.

இதேவேளை, தமிழ் மக்களுக்காகப் போராடி உயிர் நீத்தவர்களை நினைவு கூர்வதை தடுப்பதற்கும் தமிழ் மக்களின் உரிமைக் கோரிக்கைகளை நசுக்குவதற்காகவுமே சரத் வீரசேகர இவ்வாறான திட்டமொன்றை முன்னெடுத்து வருகின்றார்.

இது ஜனநாயக விரோத செயற்பாடாகும். அவ்வாறான சட்டமூலம் கொண்டு வரப்படும் பட்சத்தில் அதற்கு எதிராக நாம் செயற்படுவோம்.

இவ்வாறான செயற்பாடொன்றை இலங்கை அரசாங்கம் செய்யும் பட்சத்தில், சர்வதேசத்துக்கு முன்பாகத் தொடர்ந்தும் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டிய நிலைமை ஏற்படும். – என அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

# கட்டுநாயக்க விமான நிலையத்தில் 19 பயணிகள் விமான சேவைகள்!

## 24 மணி நேரத்துக்குள்

நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணிநேரப் பகுதியில் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் மொத்தம் 19 பயணிகள் விமான சேவைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அதன்படி இந்தக் காலக் கட்டத்தில் கட்டுநாயக்க விமான நிலையத்தில் தரையிறங்கிய 6 விமானங்களின் மூலமாக 656 பயணிகள் நாட்டை வந்தடைந்துள்ளனர் என விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அவர்களில் சவுதி அரேபியாவின் தம்மத்திலிருந்து வருகைதந்த 76 பேரும், மாலைதீவில் உள்ள ஆலையிலிருந்து வருகை தந்த 58 பேரும், ஜப்பானில் நரிட்டோவிலிருந்து வருகை தந்த 52 பேரும், கட்டாரின் டோஹாவிலிருந்து வருகை தந்த 38 பேரும் அடங்குவர். இவர்கள் அனைவரும் தனிமைப்படுத்தல் நடவடிக்கைக்காக இலங்கை இராணுவத்தினரால் அழைத்துச் செல்லப்பட்டனர்.

இதேவேளை, இந்தக் கால கட்டத்தில் 10 விமானங்களின் மூலமாக கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து 652 பயணிகள் நாட்டை விட்டு புறப்பட்டும் உள்ளனர்.

அவற்றில் கட்டாரின் டோஹாவுக்கு 144 பேரும் ஓமானின் மஸ்கட்டிற்கு 112 பேரும் புறப்பட்டவர்களுள் அடங்குவர் என்றும் கட்டுநாயக்க விமான நிலைய அதிகாரிகள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

# வெள்ளவத்தை அடுக்கு மாடி கட்டடத்திலிருந்து வீழ்ந்து பலி!

வெள்ளவத்தை, ஹம்டன் வீதி என்ற இடத்தில் நிர்மாணிக்கப்பட்டு வரும் ஓர் அடுக்குமாடி கட்டடத்திலிருந்து தவறி வீழ்ந்து ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் கடந்த சனிக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர் சுமார் 30 வயதுடையவர் என சந்தேகிக்கப்படும் நிலையில், இறந்தவரின் அடையாளம் இன்னும் உறுதி செய்யப்படவில்லை.

மேலும் அவர் குறித்த கட்டட கட்டுமானத்தில் ஈடுபட்டிருந்த தொழிலாளி அல்லர் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அவரது சடலம் களுபோவில வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன், கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகளும் வெள்ளவத்தை பொலிஸாரும் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# காணவில்லை தகவல் தரவும்




வத்திராயன் வடக்கு மருதங்கேணியைச் சேர்ந்த சிவதாஸ் வளர்மதி (வயது – 42) என்பவரை கடந்த 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமையிலிருந்து காணவில்லை.

இவர் 10 ஆம் திகதி காலை 11 மணியளவில் யாழ். தனியார் பஸ் நிலையத்தில் இறங்கியுள்ளார், அதன் பின்னர் காணாமல் போயுள்ளார். இவர் சிறிதளவு மனநிலை பாதிக்கப்பட்டிருக்கின்றமையுடன் இவர் தொடர்பான தகவல் அறிந்தால் சி.ஞானவேல் (மகன்) 0768872843, 0771945815 என்னும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு அறியத்தரவும்.

# ஜெனிவாவில் இந்திய ஆதரவைப் பெறுவதற்கே வடக்கின் 3 தீவுகள் சீனாவுக்கு வழங்கப்பட்டன!

## சி.வீ.விக்னேஸ்வரன் தெரிவிப்பு



ஜெனிவாவில் இந்தியாவின் ஆதரவை இலங்கை அரசு பெறுவதற்காகவே வடக்கின் மூன்று தீவுகள் சீனாவுக்கு வழங்கப்பட்டுள்ளன என தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.வீ.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்தில் மூன்று தீவுகள் சீன நிறுவனம் ஒன்றுக்கு மின்சக்தி உற்பத்திக்கு வழங்கப்பட்டுள்ளமை தொடர்பாக ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது மேலும் தெரிவித்த அவர் -

அண்மையில் ஒரேநாளில் இரு வேறு சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. ஒரே நாளில் அரசு இரண்டு வேறுபட்ட தீர்மானங்களை எடுத்துள்ளது கிழக்கு முனையத்தை இந்தியாவிற்கு கொடுக்க முடியாது என அறிவித்துள்ளது.

அதேபோல வடக்கு மாகாணத்தில் உள்ள மூன்று தீவுகளில் நெடுந்தீவு, அனலைதீவு, நயினாதீவு ஆகிய மூன்றையும் சீனக் கம்பனிக்கு மின்சக்தி தயாரிப்பதற்காக கொடுப்பதாகச் சொல்லி இருக்கின்றார்கள். இது மிகவும் பாரதூரமான விடயமாகும்.

முதலாவது இந்தியாவுக்கு கிழக்கு முனையத்தைக் கொடுக்காமை சம்பந்தமாக இந்தியா பார்த்துக்கொள்ளும்.

ஆனால் வடக்கு மாகாணத்தில் உள்ள மூன்று தீவுகளை கொடுப்பது என்பது எமது வடமாகாண பாதுகாப்பிற்கு மிகவும் பாரதூரமான பாதிப்புக்களை ஏற்படுத்தும் என்பது எனது கருத்து.

தற்போதைய அரசு இந்தியாவிற்கு எதிராகச் செயற்பட்டு இந்தியாவை கோபப்படுத்துவதற்காகச் செயற்படுகின்றார்கள்.

13 ஆவது திருத்தச் சட்டத்தின்படி எமது பகுதி காணிகளை ஜனாதிபதி வழங்குவதாக இருந்தால்கூட அது மாகாண சபையின் ஊடாக செய்யப்பட வேண்டும் என்று இருக்கின்றது.

எனினும் மாகாண சபையுடன் எந்தவித ஆலோசனையும் நடத்தாமல் அதற்கு பதிலாக ஆளுநரின் ஊடாக அதற்குரிய அனுமதியைப் பெற்று செய்வது மிகவும் சட்டத்துக்கு முரணானது.

எமது தமிழ் பிரதிநிதிகளும் இது தொடர்பில் தமது தீர்மானத்தைத் தெரிவிக்க வேண்டிய நிலை காணப்படுகின்றது. எதிர்காலத்தில் எமது சந்ததியினருக்கு இதனால் பாதிப்பு ஏற்படுத்தக்கூடிய நிலை காணப்படுகின்றது.

இந்தியாவில் இருந்து 49 கிலோ மீற்றர் தூரத்திலே உள்ள தீவுகளை இவ்வாறு வேறு ஒரு நாட்டுக்குக் கொடுப்பது என்பது பாரதூரமான விடயமாகும். அதேபோல் இலங்கை அரசு இதனைத் தெரியாமல் செய்யவில்லை தெரிந்துகொண்டுதான் செய்கின்றது.

அதாவது ஜெனிவாவில் இந்தியாவினுடைய ஆதரவைத் தாங்கள் பெறுவதற்காக இவற்றை நிறுத்துவதாக இருந்தால் நீங்கள் எங்களுக்கு ஜெனிவாவில் நன்மைகள் பெற்று தரவேண்டும் என்ற அடிப்படையிலும் இவற்றை செய்கின்றார்கள் என்பது எமக்கு அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. - என அவர் மேலும் தெரிவித்தார்.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## மோடி கோடி காட்டிய சேதி

**தமிழகம் வந்திருந்த இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி இலங்கைத் தமிழர் விவகாரம் குறித்து அதிகம் பிரஸ்தாபித்திருக்கின்றார்.**

**வழமையாகத் தமிழகம் வரும் இந்தியத் தலைவர்கள், தமிழக மக்களுடன் தொப்புள் கொடி உறவுகளாக விளங்கும் இலங்கைத் தமிழர்கள் குறித்து மேலோட்டமாகக் கருத்து வெளியிடுகின்றமை வழமைதான். அதில் புதுமை ஏதுமில்லை.**

**ஆனால், இம்முறை இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி கருத்து வெளியிட்ட சந்தர்ப்பமும், வெளியிட்ட கருத்தும் மிக முக்கியமானவையாக அமைகின்றன.**

**மத்தியில், பிரதமர் மோடியின் ஆளும் பாரதீய ஜனதாக் கட்சி, தமிழகத்தில் மாநில அரசை வைத்திருக்கும் அ.தி.மு.கவுடன் கூட்டணி சேர்ந்துள்ளது. தமிழக மாநில அரசின் தற்போதைய பதவிக் காலம் முடிவுக்கு வருகின்றது. பெரும்பாலும் மே மாதத்தில் –இன்னும் மூன்று மாதங்களில் – மாநிலத் தேர்தல் நடக்கவிருக்கின்றது.**

**அதனால் தமிழக மக்களின் வாக்குகளைத் தமது கூட்டணிக்குத் திருப்ப வேண்டிய கட்டாயம் பிரதமர் மோடி தரப்புக்கு உண்டு. அதனால் இலங்கைத் தமிழர் விடயத்தில் தாம் கரிசனையாக உள்ளார்கள் என்று காட்டித் தமிழக வாக்காளர்களின் மனதைக் கவர – வெல்ல – வேண்டிய கட்டாயம் அவருக்கு உள்ளது.**

**அதே சமயம் –**

**முன்னெப்போதும், இல்லாத வகையில் இலங்கை – இந்திய உறவு நிலை மோசமான கட்டத்தை அடைந்திருக்கும் சூழல் இப்போது.**

**ஏற்கனவே ஹம்பாந்தோட்டைத் துறைமுகத்தை இந்திய ஆட்சேபத்தையும் புறந்தள்ளி சீனாவுக்கு 99 வருட கால குத்தகைக்கு வழங்கி விட்டது கொழும்பு.**

**இந்தச் சீற்றத்தில் இருக்கும் இந்தியாவைச் சமாளிப்பதற்காக கொழும்புத் துறைமுக கிழக்குக் கொள்கலன் முனைய அபிவிருத்தியை இலங்கை – இந்திய – ஜப்பான் கூட்டு முயற்சியாக முன்னெடுக்க இணங்குவது போல காட்டி ஒப்பந்தம் போட்டது இலங்கை.**

**சர்வதேச ரீதியில் இவ்வாறு உடன்பாடுகளைக் காண்பதும், அத்தகைய கடப்பாடுகளை – பொறுப்புக்களை – தன்பாட்டில் ஒரு தலைப்பட்சமாகத் தூக்கிக் கடாசுவதுமான பண்பியல்பு கொண்ட கொழும்பு, இந்தக் கிழக்கு முனைய விடயத்திலும் இந்தியாவை ஏமாற்றி புறமொதுக்கும் தன் கைங்கரியத்தை பிசகின்றி முன்னெடுத்துள்ளது.**

**இந்தியாவைப் புறமொதுக்கி, அதன் தென்முனையில் உள்ள இலங்கைத் தீவில் சீனாவை அதிகம் காலூன்ற இடமளிக்கும் கொழும்பின் போக்கினால் சீற்றத்தின் உச்சியில் உள்ளது இந்தியா.**

**போதாக் குறைக்கு தமிழ் நாட்டில் உணர்வலைகளை ஏற்படுத்தக் கூடிய இலங்கைத் தமிழர் விகாரத்திலும் கூட கொழும்பின் கோட்டாபய அரசு, தான் சர்வதேச சமூகத்துக்கு நிறைவேற்ற வேண்டிய கடப்பாடுகளைத் தூக்கிக் கடாசி நடக்கின்றது. அதன் தாக்கம் தமிழகத்திலும் எதிரொலிக்கின்றது.**

**அந்த விவகாரம் அடுத்த மாதத்தில் ஜெனிவாவில் ஐ.நா மனித உரிமைகள் கவுன்ஸிலில் பிய்த்து உதறப்படும் சூழல் வந்திருக்கின்றது. சந்தர்ப்பவசமாக இம்முறையும் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் 47 உறுப்பு நாடுகளில் ஒன்றாக இந்தியா அங்கம் வகிப்பதால் இலங்கை விடயத்தில் – இலங்கைத் தமிழர் விவகாரத்தில் – அது ஒரு தீர்க்கமான முடிவை வெளிப்படுத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.**

**இலங்கைக்கு எதிரான காட்டமான பிரேரணை ஒன்றைத் தயாரிக்கும் நடவடிக்கைகளை பிரிட்டன், கனடா, ஜேர்மன், மஸிடோனியா, மொன்ரி நிக்காரோ போன்ற நாடுகள் தயாரித்து வருகின்றன. அதற்கு அமெரிக்காவின் முழு ஆசீர்வாதமும் உண்டு. தமது இந்த முயற்சிக்கு இலங்கையின் பக்கத்து நாடான – இந்தப் பிராந்தியத்தின் வல்லாதிக்க சக்தியான – இந்தியாவின் முழு ஒத்துழைப்பு வேண்டும் என அவை எதிர்பார்க்கின்றன.**

**ஜெனிவா விவகாரத்தில் இந்தியா எப்படி நடக்கப்போகின்றது, அதன் பிரதிபலிப்பு எவ்வாறு அமையும் என்பதை அறிய சர்வதேச சமூகமுமே காத்திருக்கின்றது.**

**ஜெனிவாவில் தனக்கு எதிராகக் கொண்டு வரப்படக் கூடிய பிரேரணையை பாகிஸ்தான், சீனா போன்ற நாடுகளின் உதவியுடன் முறியடிப்பதில் முழு முயற்சியுடன் நிற்கின்றது கொழும்பு. அப்படி முறியடிக்கும் அணியுடன் இந்தியா சேருமா அல்லது இலங்கைத் தமிழர்களின் நலன் கருதி இலங்கைக்கு எதிராகக் கொண்டு வரப்படும் பிரேரணையை இந்தியா ஆதரிக்குமா அல்லது வழமை போல எதிர்த்துப்பேசி விட்டு வாக்களிக்கும் போது மதில் மேல் பூனையாக நடுநிலை வகிக்குமா என்றெல்லாம் கேள்விகள் எழுந்துள்ளன.**

**இலங்கைத் தமிழர்களுக்காக அதிகம் கவலைப்படுபவன் நானே, அதிகம் சிரத்தை காட்டுவது எனது அரசே என்று கூறியதன் மூலம் இக்கேள்விகளுக்கு – சந்தேகங்களுக்கு – எதிர்பார்ப்புகளுக்கு – ஒரு நல்ல பதிலை மேலோட்டமாகக் கோடி காட்டியிருக்கின்றார் பிரதமர் மோடி என்றே கொள்ள வேண்டும்.**

# 20 இற்கு ஆதரவளித்த முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்களுக்கு மன்னிப்பு தர நிபந்தனை

கொழும்பு, ஜன. 15

20 ஆவது அரசமைப்பிற்கு ஆதரவளித்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு கட்சியிலும், பொது மக்களிடத்திலும் மன்னிப்பு கேட்கவேண்டும் என்ற நிபந்தனைகளுக்கு அமைய மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது.

முஸ்லிம் காங்கிரஸின் அதியுயர் பீடம் கடந்த சனிக்கிழமை கட்சித் தலைவர், நாடாளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கிம் தலைமையில் கூடியது.

நிகழ்வின்பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த ஹக்கீம் -

தமக்கு ஏற்பட்ட அச்சுறுத்தல் காரணமாக 20 ஆவது அரசமைப்பிற்கு ஆதரவளித்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூறினர். அதற்கு எமது உயர்பீடம் கடுமையான விமர்சனங்களை முன்வைத்தது. இந்தத் தவறுக்கு பொது மக்களிடத்தில் மன்னிப்பு கேட்பது அவசியம் என கேட்டுக் கொள்ளப்பட்டது. அதற்கு 20 ஐ ஆதரித்த உறுப்பினர்கள் இணக்கம் வெளியிட்டனர் அவர்களின் செயற்பாடு தொடர்பாக எமது உயர்பீடம் கவலையடைகின்றது. - என்றார்.

எவ்வாறாயினும் கொவிட் தொற்றால் உயிரிழக்கும் ஜனாஸாக்களை அடக்கம் செய்ய அனுமதியளிப்பதாகத் தெரிவித்த உறுதிப்பாட்டுக்கு அமையவே 20 இற்கு ஆதரவளித்தோம் என 20 ஐ ஆதரித்த உறுப்பினர்கள் கூறினர்.

முஸ்லிம் காங்கிரஸின் உயர்பீட கூட்டம் கட்சித் தலைமையகமான தாருசலாமில் கடந்த சனிக்கிழமை மாலை கூடியது.

இதன்போது 20ஐ ஆதரித்த முஸ்லிம் காங்கிரஸின் நாடாளுமன்ற உறுப்பினர்களான பாயிசர் காசிம், எச்.எம்.எம் ஹரிஸ், எம்.எஸ் தௌபீக் மற்றும் அன்வர் சாமேட் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# பாக். பிரதமர் இம்ரான்கானின் இலங்கை விஜயம் இந்திய அரசுக்கு எதிரானதாக அமையக் கூடாது!

## இராதாகிருஷ்ணன் வலியுறுத்தல்

பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கானின் இலங்கைக்கான விஜயம் இந்திய அரசாங்கத்துக்கு எதிரானதாக அமைந்து விடக்கூடாதென நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

நுவரெலியாவில் நேற்று (ஞாயிற்றுக் கிழமை) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

குறித்த ஊடகவியலாளர் சந்திப்பில் வேலுசாமி இராதாகிருஷ்ணன் மேலும் கூறியுள்ளவை வருமாறு:-

தற்பொழுது இலங்கையில் இந்தியாவிற்கு எதிரான ஒரு நிலைப்பாடு ஏற்பட்டுள்ளது. அதற்குக் காரணம் கொழும்பு துறைமுகம் தொடர்பாக ஏற்பட்டுள்ள முறுகல் நிலையாகும்.

ஆரம்பத்தில் இந்திய அரசாங்கத்துக்கு வழங்குவதற்குத் தயாராக இருந்த நிலையில் இலங்கையில் ஏற்பட்ட பல்வேறு தரப்பினரின் இந்திய எதிர்ப்பு போராட்டம் காரணமாக இந்தத் தீர்மானம் கைவிடப்பட்டுள்ளது.

இதன் காரணமாக தற்பொழுது இந்தியா தொடர்பாக இலங்கையில் பல்வேறு முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன. இவ்வாறான ஒரு நிலையில் பாகிஸ்தான் பிரதமரின் இலங்கை விஜயம் தொடர்பாகப் பல கேள்விகள் எழுகின்றன.

மேலும் பாகிஸ்தான் பிரதமரின் இலங்கை விஜயம் இந்தியாவிற்கு எதிரானதாக அமைந்து விடக்கூடாது. ஏனெனில் இந்தியா என்பது எமது குடும்பத்தில் ஒருவர் போல. பல்வேறு இக்கட்டான சந்தர்ப்பங்களிலும் இந்தியாவின் உதவி எமக்குக் கிடைத்துள்ளது. - என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# தமிழ் மக்களை கொத்தடிமைகள் போன்றே அரசு நடத்துகின்றது!

## வடக்கு, கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்டோர் உறவுகள்



பொத்துவில் - பொலிகண்டி பேரணியில் கலந்துகொண்டவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்று அரசாங்கம் கூறுகின்றமை எமக்கு ஆச்சரியமளிக்கவில்லை.

ஏனென்றால் அனைவரும் இலங்கையர்கள் என்று அரசாங்கம் வெறுமனே வாய்வார்த்தையில் கூறினாலும், உரிமைகளைப் பொறுத்தவரையில் எம்மை வேற்றுநாட்டவர்கள் போன்றும் கொத்தடிமைகள் போன்றுமே நடத்துகின்றார்கள் என்று வடக்கு, கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்டோர் சங்கத்தின் செயலாளர் நீலாதேவி தெரிவித்தார்.

பேரணியில் வடக்கு, கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்டோர் சங்கத்தின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டிருந்த நிலையில், இது தொடர்பில் கேள்வி எழுப்புகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதுபற்றி மேலும் கூறியவை வருமாறு:-

பேரணியில் கலந்துகொண்டமைக்கான நடவடிக்கை என்ற அடிப்படையில் இதுவரையில் எமக்கு எந்தவொரு நீதிமன்ற உத்தரவும் வரவில்லை.

எனினும் சுதந்திரதினத்தைக் கரிநாளாகக்கருதி அன்றைய தினம் நாங்கள் வவுனியாவில் போராட்டமொன்றை முன்னெடுத்திருந்தோம். அந்தப் போராட்டத்துக்கு ஏற்கனவே நீதிமன்றம் தடைவிதித்திருந்தமையால், அதில் கலந்துகொண்டமைக்காக வவுனியா நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது.

அதேவேளை பொத்துவில் -பொலிகண்டி வரையான பேரணியில் கலந்துகொண்டவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்று அரசாங்கம் கூறுகின்றமை எமக்கு ஆச்சரியமளிக்கவில்லை.

ஏனென்றால் எமது பிள்ளைகள் காணாமலாக்கப்பட்டமைக்கான வாழும் சாட்சிகளாக நாங்கள் இருக்கும்போதே, யாரும் காணாமல்போகவில்லை என்று கூறுபவர்கள் எமக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதாகக் கூறுவதில் ஆச்சரியமில்லை.

ஏனென்றால் அனைவரும் இலங்கையர்கள் என்று அரசாங்கம் வெறுமனே வாய்வார்த்தையில் கூறினாலும், உரிமைகளைப் பொறுத்தவரையில் எம்மை வேற்றுநாட்டவர்கள் போன்றும் கொத்தடிமைகள் போன்றுமே நடத்துகின்றார்கள்.

உண்மையில் இந்நாட்டில் பெரும்பான்மையின சிங்களவர்களுக்கு மாத்திரமே சுதந்திரம் கிடைத்திருக்கிறது. அது எமக்கு இன்னமும் கிடைக்கவில்லை.

இவற்றையெல்லாம் சர்வதேசசமூகம் இன்னும் எவ்வளவு நாள்களுக்குப் பார்த்துக்கொண்டிருக்கப்போகின்றது என்பதே எமது தற்போதைய கேள்வியாக இருக்கின்றது. - என்று தெரிவித்தார்.

# பொலிஸ் சிறப்பு நடவடிக்கை 3 ஆயிரத்து 880 பேர் கைது!

நாடு முழுவதும் பொலிஸார் முன்னெடுத்த சிறப்பு நடவடிக்கையில் கைது உத்தரவு பிறப்பிக்கப்பட்ட 1,572 நபர்கள் உட்பட மொத்தம் 3 ஆயிரத்து 880 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கடந்த சில மணிநேரங்களில் 494 காவல் நிலையங்களுடன் இணைக்கப்பட்ட சுமார் 16 ஆயிரத்து 500 பொலிஸ் அதிகாரிகளின் உதவியுடன் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த நடவடிக்கையின் போது குற்றங்கள் தொடர்பாக 127 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும், போதைப்பொருள் மற்றும் சட்டவிரோத மதுபானம் வைத்திருந்தனர் என 983 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் றோஹண குறிப்பிட்டார்.

மேலும் 672 நபர்கள் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டும் உள்ளனர்.

அதேநேரம் இந்த நடவடிக்கையின் போது சட்ட விரோதமாக துப்பாக்கிகளை வைத்திருந்தமைக்காக எட்டுப் பேர் கைதுசெய்யப்பட்டுள்ளமையுடன், இதன் போது ஆயுதங்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

செல்வாக்கின் கீழ் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டுக்காக 518 பேர் கைதுசெய்யப்பட்டும் உள்ளனர் என அஜித் றோஹண கூறினார்.

வீதிப் பாதுகாப்பை உறுதி செய்வதற்காகவும், குற்ற விகிதங்களைக் குறைப்பதற்காகவும் இதுபோன்ற நடவடிக்கைகள் தொடர்ந்து நடத்தப்படும் என்று அவர் தெரிவித்தார்.

# கொழும்புக்கான புதிய விமான சேவையை அறிமுகப்படுத்தியது குவைத் ஜசீரா ஏயர்வேஸ்!

'குவைத் பட்ஜெட் கேரியர் ஜசீரா ஏயர்வேஸ்' இலங்கையின் தலைநகருக்கு ஒரு புதிய விமான சேவையை அறிமுகப்படுத்துவதாக அறிவித்துள்ளது.

அதன்படி மத்திய கிழக்கில் விமான சேவை வழங்கும் இடங்களுக்கான இணைப்புகளுடன் குவைத் மற்றும் கொழும்பு இடையே வாரத்துக்கு இரண்டு முறை நேரடி விமான சேவையை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளது.

கொழும்புக்கான விமானங்கள் ஜசீராவின் புதிய ஏயர்பஸ் ஏ 320 நியோ விமானங்களின் விரிவாக்கக் கடற்படையில் இருக்கும், இவை அனைத்தும் ஹெப்பா ஏயர் வடிப்பான்களுடன் பொருத்தப்பட்டுள்ளன.

பயணிகள் பாதுகாப்பாக பயணிப்பதை உறுதி செய்வதற்காக ஜசீரா ஏயர்வேஸ் தனது விமானத்திலும், குவைத்தில் உள்ள ஜசீரா டெர்மினல் டி 5 யிலும் ஒவ்வொரு பாதுகாப்பு மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் எடுத்துள்ளது.

குறித்த விமான அட்டவணையை அறிவித்த ஜசீரா,

ஜே – 9 551 செவ்வாய்க்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் குவைத் சர்வதேச விமான நிலையத்திலிருந்து மாலை 6.45 மணிக்கு புறப்பட்டு அதிகாலை 2.35 மணிக்கு கொழும்பை சென்றடையும்.

விமானம் ஜே – 9 552 திங்கள் மற்றும் புதன் கிழமைகளில் கொழும்பிலிருந்து அதிகாலை 3.35 மணிக்கு புறப்பட்டு காலை 7.05 மணிக்கு குவைத்தில் தரையிறங்கும்.

# நாட்டுக்கு எதிரானவர்களுக்கு அரசின் செயற்பாடு வாய்ப்பளிப்பு!

## பிமல் ரத்நாயக்க சுட்டிக்காட்டு



கொரோனாவைரஸ் தொற்றால் உயிரிழப்போரின் சடலங்களை அடக்கம் செய்யும் விவகாரத்தில் அரச தரப்பிலிருந்து ஒன்றுக்கொன்று முரணான கருத்துக்கள் வெளியிடப்படுகின்றன.

இவ்வாறான செயற்பாடுகள் நாட்டுக்கு எதிரானவர்களுக்கு வாய்ப்பளிப்பதாக மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

இந்த விவகாரம் தொடர்பாக வினவியபோதே பிமல் ரத்நாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுபற்றி அவர் மேலும் கூறியவை வருமாறு -

சடலங்களை அடக்கம் செய்யும் விவகாரத்தில் அரச தரப்பிலிருந்து ஒன்றுக்கொன்று முரணான கருத்துக்கள் வெளியிடப்படுகின்றன.

அதேபோன்று கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழப்போரின் சடலங்கள் தொடர்பில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கூறவில்லை என்றும் சிலர் கருத்து வெளியிட்டிருக்கிறார்கள்.

எனினும் நாமறிந்த வரையில் அவர் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழப்போரின் சடலங்களை அடக்கம் செய்வது குறித்த கேள்வியொன்றுக்கே பதிலளித்தார்.

ஜெனிவாவில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடர் விரைவில் ஆரம்பமாகவுள்ள நிலையில், அதனால் ஏற்படக்கூடிய அழுத்தம் மற்றும் சர்வதேச சமூகத்திலிருந்து எழுந்திருக்கும் அழுத்தங்களை எதிர்கொள்ளும் நோக்கிலும் பிரதமர் இவ்வாறு கூறியிருக்கலாம்.

எனினும் அதனை நடைமுறைப்படுத்த வேண்டுமெனின், ஏற்கனவே வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலை நீக்கி புதிய வர்த்தமானி அறிவித்தலை வெளியிட வேண்டியது அவசியமாகும்.

ஆனால், இந்த விடயத்தில் அரசாங்கத்திற்குள்ளேயே ஒருவருக்கொருவர் முரணான கருத்துக்களை வெளியிடுவதென்பது, எமது நாட்டுக்கு எதிராகச் செயற்படும் அமைப்புக்களுக்கு வாய்ப்பளிப்பதாகவே அமையும் என்று குறிப்பிட்டார்.

# கொழும்புத் துறைமுக மேற்கு முனையத்தை பிறநாடுகளுக்கு வழங்க இடமளிக்கமுடியாது!

## அகில இலங்கை துறைமுக பொது ஊழியர் சங்கம் விடாப்பிடி

கொழும்பு துறைமுகத்தின் மேற்கு முனையத்தைப் பெற்றுக்கொள்வதற்கு இந்திய நிறுவனம் இணக்கம் தெரிவித்துள்ளதாகவும், புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட அரசாங்கம் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவதாகவும் அறிய முடிகிறது.

மேற்கு முனையத்தின் 85 சதவீத உரிமத்தை பிறநாட்டு நிறுவனத்துக்கு வழங்க இடமளிக்க முடியாது. கிழக்கு முனையத்தைப் பாதுகாக்க மேற்கொண்ட முயற்சியை மேற்குமுனைய விவகாரத்திலும் முன்னெடுப்போம் என அகில இலங்கை துறைமுக பொது ஊழியர் சங்கத்தின் செயலாளர் நிரோஷன் கொரகாஹேன்ன தெரிவித்தார். அவர் மேலும் குறிப்பிடுகையில் -

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனைய விவகாரத்தில் துறைமுக தொழிற்சங்கத்தினர் கடுமையான தொழிற்சங்கப் போராட்டத்தில் ஈடுப்படாமலிருந்திருந்தமையால் அரசாங்கம் கிழக்கு முனையத்தை இந்திய நிறுவனத்துக்கு வழங்கியிருக்கும் அனைத்து தரப்பினரது ஆதரவையும் கொண்டு மூன்றில் இரண்டு பெரும்பான்மைமிக்க அரசாங்கத்தை அடிபணிய வைத்துள்ளோம்.

கிழக்கு முனையத்துடன் மேற்கு முனையத்தை ஒப்பிட முடியாது. கிழக்கு முனையமே பெறுமதியானது என அரசியல்வாதிகள் அரசியல் இலாபத்துக்காகக் குறிப்பிட்டுக் கொள்ளும் கருத்துக்களை நாட்டு மக்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். அரசியல்வாதிகள் ஒன்றும் படித்த துறைசார் நிபுணர்கள் கிடையா. அரசியல்வாதிகள் அனைத்து விடயங்களையும் அரசியல் இலாபத்துடன் ஆராய்வார்கள்.

கிழக்கு முனையத்துக்குப் பதிலாக மேற்கு முனையத்தை இந்தியாவுக்கு வழங்க அரசாங்கம் எடுத்த தீர்மானத்துக்கு இந்தியா ஆரம்பத்தில் அதிருப்தி தெரிவித்திருந்தாலும் தற்போது குறித்த இந்திய நிறுவனம் கொழும்பு துறைமுகத்தின் மேற்கு முனையத்தை பெற்றுக் கொள்ள இணக்கம் தெரிவித்துள்ளதாகவும், புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடுவதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுத்து வருவதாகவும் அறிய முடிகிறது.

தேசிய வளங்களைப் பாதுகாக்கும் விடயத்தில் கிழக்கு முனையம் ,மேற்கு முனையம் என்ற வேறுபாடு கிடையாது. அனைத்து தேசிய வளங்களையும் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்துக்கு உண்டு. ஆட்சிக்கு வரும் அரசாங்கங்கள் அனைத்தும் ஆட்சி காலத்தில் தேசிய வளங்களை பிற நாட்டவர்களுக்கு ஏதாவது ஒரு வழியில் விற்றுள்ளார்கள். இந்த விடயத்தில் தற்போதைய அரசாங்கம் ஒன்றும் விதிவிலக்கல்ல.

கொழும்பு துறைமுகத்தின் மேற்கு முனையத்தின் 85 சதவீத உரிமத்தை அரசாங்கம் இந்திய நிறுவனத்துக்கு வழங்கத் தீர்மானித்துள்ளது. கிழக்கு முனையத்தை பாதுகாத்ததைப் போன்று மேற்கு முனையத்தையும் பாதுகாக்க தொழிற்சங்க நடவடிக்கைகளை முன்னெடுப்போம். தொழிற்சங்க போராட்டம் தொடர்பில் எதிர்வரும் வாரம் உறுதியான தீர்மானத்தை அறிவிப்போம். - என்றார்.

# சிறைக்குள் வீசப்பட்ட போதைப் பொதி!

களுத்துறை சிறைச்சாலையில் மதிலுக்கு மேல் இனந்தெரியாத நபர்களால் வீசப்பட்ட கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருள்களடங்கிய பொதியொன்றை சிறைச்சாலை அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

இந்த பொதியில் 3 தொலைபேசிகள் , 45 கிராம் கஞ்சா போதைப்பொருள், 4 புகையிலைகள், புகைப்பிடித்தலுக்காக பயன்படுத்தப்படும் 5 லைட்டர்கள், 5 கிராம் ஐஸ் போதைப் பொருள் மற்றும் 5 கடதாசிகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைதிகளில் யாருக்காவது வழங்கும் நோக்கத்திலேயே இந்த பொதி வீசப்பட்டிருக்கும் என்று சந்தேகிக்கும் சிறைச்சாலை அதிகாரிகள் அது தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சைக்குத் தயாராகும் மாணவர்களுக்கான பயிற்சி வினாத்தாள்

**தமிழ் மொழியும் இலக்கியமும் III**

எஸ்.தர்சிகா
WP/kE/St. Anthony's College

**இரண்டு மணித்தியாலம்**
**Two Hour**

## தமிழ் மொழியும் இலக்கியமும் III

**1. சுருக்கமான விடை எழுதுக.**

(i) "உப்பிலாக் கஞ்சியினை யுண்ணு மறுசுவை போல்
தப்பிய கந்தைபீ தாம்பரம் போல்..."
(அ) இங்கு அறுசுவை உணவாகக் கருதப்படுவது எது?
(ஆ) 'தப்பிய கந்தை' என்பதனால் நீர் விளங்கிக் கொள்வது யாது?

(ii) "வெங்கட் பிறைக்கும் கரும் பிறைக்கும்
மெலிந்தப் பிறைக்கும் விழிவேலே...."
(அ) கரும்பிறை என்பது யாரைக் குறிக்கிறது?
(ஆ) 'அப்பிறைக்கும்' என்பதன் பொருளைத் தருக.

(iii) "சத்யஜித்ரேயின் பதேர்பாஞ்சாலியில் பருவங்கள் மாறுவதை சில மயங்கித் தெளிதல்கள் மூலம் உணர்த்துகிறார்."
(அ) பதேர் பாஞ்சாலி என்பது எவ்வகைக் கலை வடிவம்?
(ஆ) இங்கு 'மயங்கித் தெளிதல்' என்றால் என்ன?

(vi) "கலியுக அரிச்சந்திரனாக மகாத்மா காந்தியடிகள் வாழ்க்கை நடத்தினார். அவருக்கு சத்தியமே பெரிது"
(அ) காந்தியடிகளைக் 'கலியுக அரிச்சந்திரன்' எனக் குறிப்பிடுவதன் காரணம் யாது?
(ஆ) காந்தியடிகளின் வாழ்வின் இலட்சியமாகவிருந்தது எது?

(v) "கைவிடுவேன் என்று எண்ணிக் கவலைப்படாதே கண்ணார்
அல்லாமேல் ஆணை – உன்னை அடையாட்டி காட்டுப்பள்ளி"
(அ) கவலை ஏற்படுவதற்கான காரணமாகக் காட்டப்படுவது எது?
(ஆ) 'காட்டுப்பள்ளி' என்பதன் பொருள் யாது?

(vi) "சுடு மயானத்திடை தன்றுணையேகத்
தோன்றறுயர்க் கடலினேகக்...."
(அ) 'துணை ' எனக் குறிப்பிடப்படுபவர் யார்?
(ஆ) 'துயர்க்கடல்' என்பது எவ்வகை அணி?

(vii) "யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்ற நிகரற்ற மனநிலை தமிழர் பண்பாட்டின் அரிய கோட்பாடுகளுள் ஒன்றாகும்."
(அ) 'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்பதன் மூலம் வெளிப்படும் உயர் பண்பு எது?
(ஆ) இங்கு வையகம் என்பது குறிப்பாக யாரைக் குறிக்கிறது?

(viii) "இற்றைத் திங்கள் இவ்வெண்ணிலவில்
வென்றெறி முரசின் வேந்தரெம் குன்றுங் கொண்டார்........."
(அ) இங்கு முரசின் வேந்தர் யாவர்?
(ஆ) 'எம் குன்று' என்பதில் குறிப்பிடப்படும் குன்று எது?

(x) "ஐவராம் அவனிபர்க்கும் நினைவு எது என்று
அருள் புரிந்தான் அமரர் கோமான்'
(அ) ஐவராம் அவனிபர் என்று குறிப்பிடப்படுபவர் யாவர்?
(ஆ) 'அமரர் கோமான்' என இங்கு குறிப்பிடப்படுபவர் யார்?

(xi) "என்னத்துக்கு, இந்த வண்டிலுக்கு குடிலப் போல ஓல கட்டினீங்க" கேட்டேன். "மழ வெய்யில்ல நனயாம அவை கொண்டு போகணும்"
(அ) 'அவவ' என்று குறிப்பிடப்படுபவர் யார்?
(ஆ) இவ்வரிகள் ஊடாக வெளிப்படுத்தப்படும் உணர்வு யாது?

2. பின்வரும் செய்யும் பகுதிகளையும் உரைநடைப்பகுதிகளையும் வாசித்து அவற்றின் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

(i) யானை அனையவர் நண்பொர்இ நாயனையார்
கேண்மை தழீஇக் கொளல் வேண்டும் – யானை
அறிந்தறிந்தும் பாகனையே கொல்லும் எறிந்தவேல்
மெய்யதா வால் குழைக்கும் நாய்
(அ) இச்செய்யுளில் கூறப்படும் பிரதான கருத்து யாது?
(ஆ) அது எவ்வாறு எடுத்துக்காட்டப்பட்டுள்ளது?



ஒருங்கிணைப்பு:- கே.எஸ்.ரகு

(ii) கழியும் பிழைபொருட் டள்ளிநன்னூலாங் கடலினுண்டு
வழியும் பொதிகை வரையினிற் கால்கொண்டு வண்கவிதை
மொழியும் புலவர் மனத்தே யிடித்து முழங்கி மின்னிப்
பொழியும் படிக்குக் கவிகாள மேகம் புறப்பட்டதே.

(அ) கவியாற்றல் மிக்க புலவர்களுடைய பொது இயல்புகளாகக் குறிப்பிடப்படுபவை எவை?
(ஆ) காளமேகப் புலவரின் கவியாற்றல் எவ்வாறு விளக்கப்படுகிறது?

(iii) சூடுகின்ற துழாய் முடியோன் சுரருடனே
முனிவர்களும் சுருதி நான்கும்
தேடுகின்ற பதம் சிவப்ப திரு நாடு
பெறத் தூது செல்ல வேண்டா
வாடுகின்ற மடப் பாவை தன் வரமும்
என் வரமும் வழுவா வண்ணம்
கோடுகின்ற மொழியவன்பால் எனைத்தூது
விடுக இனி கொற்ற வேந்தே

(அ) கண்ணனது சிறப்பு எவ்வாறு எடுத்துக்காட்டப்படுகின்றது?
(ஆ) வீமன் தன்னைத் தூதாக அனுப்பும்படி வேண்டியது ஏன்?

(vi) சினிமா, கமராவினால் பதிவு செய்யப்பட்ட பல்சுவை நிகழ்ச்சியல்ல. எந்த ஒரு படத்திலும் இழையோடும் ஒரு மையக்கரு ஒன்று இருக்கும். இந்தக் கருவைச் சாராத எந்தக் காட்சி படிமத்துக்கும், ஒலிக்கும் அப்படத்தில் இடமில்லை. அப்படிச் சம்பந்தமில்லாத காட்சி வந்தால் அது சினிமாவாக இல்லாமல் படமாக்கப்பட்ட பல்சுவை நிகழ்ச்சி ஆகிறது. சினிமா, வாய்ப்பேச்சால் வார்த்தைகளால் சொல்லப்படுவதல்ல. அப்படி இருந்தால் அதற்கு ஒரு திரை தேவையிருக்காது. ஒலிநாடாவிலோ வானொலியிலோ கேட்டுத் திருப்தி அடைய முடியும்.

(அ) இங்கு நல்ல சினிமாவின் சிறப்புக்களாக குறிப்பிடப்படுவன யாவை?
(ஆ) ஒரு சினிமா எப்போது பல்சுவை நிகழ்ச்சியாகிறது?

(v) தசரதன் இரண்டு இலட்சியங்களிடையே ஊசலாடுகின்றான். ஒன்று அரசியல், மற்றையது சத்தியம், இவ்விரண்டில் ஒன்றைத் தெரிவு செய்வதில் அவன் திண்டாடுகிறான். அரசியற் கொள்கையின் படி மூத்த புதல்வனுக்கு முடிசூட்டுவதா? அல்லது கைகேயிக்குக் கூறிய சத்தியவாக்கை நிலைநாட்டுவதா? இந்த தரும சங்கடத்தின் மத்தியில் ஊசலாடும் அரசன் நினைக்கின்றான அரசியல் நிலைமாறக் கூடியது. சத்தியம் நிலைமாறாதது. நிலைமாறும் தன்மையுள்ள அரசியற் கொள்கையைக் கைவிடுவேன்,
(அ) தசரதனது ஊசலாட்ட நிலையை எடுத்துக் காட்டுக.
(ஆ) இறுதியில் தசரதன் எடுத்த முடிவில் எது முதன்மைப்படுத்தப்படுகிறது?

3. கம்பியூட்டர் என்ற சிறுகதையில்
(அ) கம்பியூட்டர் கொள்வனவு
(ஆ) கம்பியூட்டரால் குடும்பத்தில் ஏற்பட்ட மாற்றம்
ஆகியன விளக்கப்படுமாற்றினைத் தருக.

அல்லது

இலட்சியமும் சமநோக்கும் என்ற இலக்கியக் கட்டுரையில்
(அ) இலட்சியமும் இலக்கியங்களும்
(ஆ) இலட்சியமும் சமூக உருவாக்கமும்
தொடர்புபடுமாற்றினை விளக்குக.

4. நாட்டார் பாடல்கள் பகுதியில்
(அ) 'ஏர்ப்பாடலின்' ஊடாக நல்ல சிந்தனைகளும்
(ஆ) 'அரிவி வெட்டு' பற்றிய பாடலில் ஐயனாரிடம் செய்யப்படும் வேண்டுதல்களும்
(இ 'காதற்பாட்டில்' ஆழமான காதல் உணர்வுகளும்
முன்வைக்கப்பட்டிருக்குமாற்றை விளக்குக.

அல்லது

**தத்தை விடுதூது** என்னும் பகுதியில்
(அ) அக்காலப் பெண்களின் சமூகநிலை
(ஆ) அச்சமூகநிலை மாற்றியமைக்கப்பட வேண்டிய முறை
ஆகியன வெளிப்படுமாற்றினை விளக்குக.

பின்வரும் 5,6,7 ஆகிய வினாக்களுள் ஏதாவது ஒன்றைத் தெரிவு செய்து விடை எழுதுக.

5. தமிழ்ப் பண்பாடு எனும் இலக்கியக் கட்டுரையில் இருந்து
(அ) தமிழ்ப்பண்பாட்டின் கோட்பாடுகள்
(ஆ) தமிழர்களின் பரந்த உலக மனப்பான்மை
என்பன பற்றி கட்டுரையாசிரியரால் வெளிப்படுத்தப்படும் விடயங்களை எழுதுக.

6. **குகப்படலத்தில்** பரதன் குகனுக்கு
(அ) கோசலை (ஆ) சுமித்திரை
ஆகியோரை அறிமுகஞ் செய்யும் பாங்கினை விளக்குக.

7. **சீறி ஓடாத வருங்கால மனித நதி** எனும் கவிதையில்
(அ) எழுத்தறிவின்மையின் அவலம் (ஆ) இளைஞனின் எதிர்காலம் பற்றிய கவிஞரின் ஏக்கம்
ஆகியன சித்திரிக்கப்படுமாற்றினை விளக்குக.



கலைக்கதிர் Kalaikkathir

# உருமாறிய புதிய வகை கொரோனா இலங்கைக்குள் எவ்வாறு உட்புகுந்தது?

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் கேள்வி

கொழும்பு, ஜன. 15

இங்கிலாந்தில் இனங்காணப்பட்ட உருமாறிய புதிய வகை வைரஸ் இலங்கையில் எவ்வாறு உட்புகுந்தது? தற்போது கூறப்பட்டுள்ள 4 பிரதேசங்களைத் தவிர வேறு பகுதிகளில் இந்த வைரஸ் பரவல் காணப்படுகின்றதா என்பது தொடர்பில் கண்டறிவதற்காக துரிதமாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

இங்கிலாந்தில் இனங்காணப்பட்ட உருமாறிய புதிய வகை வைரஸ் இலங்கையின் 4 பிரதேசங்களில் கண்டறியப்பட்டுள்ளமை தொடர்பில் அச் சங்கம் மேலும் கூறுகையில்–

இலங்கையில் இந்த வைரஸ் எவ்வாறு உட்புகுந்தது என்று ஸ்திரமாகக் கூற முடியாத நிலைமை தற்போது ஏற்பட்டுள்ளது. அத்தோடு கடந்த வியாழக்கிழமை இனங்காணப்பட்ட வைரஸ் தவிர வேறு வைரஸ் வகைகளும் இலங்கையில் பரவியுள்ளனவா என்பது தொடர்பில் துரிதமாக ஆராயப்பட வேண்டும்.

தென் ஆபிரிக்காவில் இனங்காணப்பட்டுள்ள புதிய வகை வைரஸும் இலங்கையில் பரவியுள்ளதா என்று எம்மிடம் எவரேனும் கேள்வியெழுப்பினால் அதற்கு 'தெரியாது' என்று பதில் கூறக்கூடிய நிலைமையே காணப்படுகிறது.

இவை தொடர்பில் நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு தேவையான ஏற்பாடுகளை செய்து தருமாறு கோரிய போதிலும், சுகாதார அமைச்சு அதனை கவனத்தில் கொள்ளவில்லை.

இங்கிலாந்தில் புதிய வகை வைரஸ் பரவல் இனங்காணப்பட்ட போது அங்கு முழு நாடும் முடக்கப்பட்டது. இதன் மூலம் தொற்றாளர்களின் எண்ணிக்கையை அவர்களால் விரைவாகக் குறைக்கக் கூடியதாக இருந்தது.

ஆஸ்திரேலியாவின் மெல்பன் நகரில் கடந்த வெள்ளிக்கிழமை 13 தொற்றாளர்கள் மாத்திரமே இனங்காணப்பட்டனர். அங்கு புதிய வகை வைரஸ் இன்காணப்பட்டவுடன் உடன் அமுலாகும் வகையில் மெல்பன் நகரம் ஒரு வாரத்துக்கு முடக்கப்பட்டது. நாமும் அவ்வாறு செய்ய வேண்டும் என்று நாம் கூறவில்லை. ஆனால் வெளிநாடுகளில் எவ்வாறான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன என்பவற்றை அவதானித்து இலங்கைக்குப் பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். புதிய வைரஸ் பரவலுக்கு எவ்வாறு முகங்கொடுப்பது என்பது தொடர்பில் தொற்று நோயியல் பிரிவு சுகாதார அமைச்சுக்குப் பரிந்துரைகளை முன்வைக்க வேண்டும். என்றுள்ளது.

# இராணுவத்துக்கு ஆள்சேர்ப்பு!

இலங்கை இராணுவத்திற்கு படையினரை ஆள்சேர்ப்பு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக இராணுவத் தலைமையகம் அறிவித்துள்ளது.

ஆண், பெண் என இருபாலாரும் படையில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர் எனக் கூறப்பட்டுள்ளது. 18 – 24 வயதுக்கு இடைப்பட்ட இலங்கை பிரஜைகள் இதற்கு விண்ணப்பிக்க முடியும்.

10 ஆம் வகுப்பில் சித்தி பெற்றிருத்தல் உள்ளிட்ட அடிப்படை தகைமைகள் நியமனத்தின் போது கவனத்தில் கொள்ளப்படும்.

யாழ், வன்னி, கிழக்கு, கிளிநொச்சி, முல்லைத்தீவு, மேற்கு மற்றும் மத்தி ஆகிய பாதுகாப்பு படை தலைமையகங்களில் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பயிலுநர்களை ஆள்சேர்ப்பு செய்யும் பணிப்பாளர் சபை, இராணுவ முகாம், பெப்பிலாயான மாவத்தை, கொஹுவலை (011 – 2815080/ 011– 3137553) என்ற முகவரியில் அனைத்து ஆட்சேர்ப்புக்களுக்குமான விசாரணைகள் இடம்பெறும் என்றும் இராணுவத் தலைமையகம் தெரிவித்துள்ளது.

# சிறைச்சாலைக்கு சொந்தமான காணியில் 30 வருடங்களுக்குப் பின்னர் விவசாயம்!





மட்டக்களப்பு, ஜன. 15

மட்டக்களப்பு சிறைச்சாலைக்குச் சொந்தமான காணியில் 30 வருடங்களுக்குப் பின்னர் விவசாயம் செய்யப்பட்டு, அறுவடை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கடந்த காலத்தில் இடம்பெற்ற யுத்தம் காரணமாகக் கவனிப்பாரற்ற நிலையில் திருப்பெருந்துறை பகுதியில் இருந்த மட்டக்களப்பு சிறைச்சாலைக்கு சொந்தமான காணியில் விவசாய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

இதன் அறுவடை விழா, கடந்த சனிக்கிழமை மட்டக்களப்பு சிறைச்சாலை அத்தியட்சகர் சுஜீவ ஜெயசேகர தலைமையில் நடைபெற்றது.

இதன்போது பாரம்பரிய நடைமுறைகளுக்கு அமைவாக வழிபாடுகள் முன்னெடுக்கப்பட்டு அறுவடை நிகழ்வு ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் மட்டக்களப்பு சிறைச்சாலை பிரதம சிறைக்காவலர் ஆர். மோகன்ராஜ் உட்பட சிறைச்சாலை உத்தியோகத்தர்கள், சிறைச்சாலையின் நிர்வாக பிரிவு உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

முதல் கட்டமாக சுமார் 18 ஏக்கர் வயல் நிலத்தில் விவசாய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்ட நிலையில் சிறந்த விளைச்சல் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு சிறைச்சாலை பிரதம சிறைக்காவலர் ஆர். மோகன்ராஜ் தெரிவித்தார்.

# 4 ஆயிரத்து 679 ஆக அதிகரித்தது சிறைக் கொரோனாக் கொத்தணி!

சிறைச்சாலைகளில் மேலும் இருவருக்கு கொரோனாத் தொற்று உறுதியாகியுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

அதன்படி அங்கு இதுவரை 4 ஆயிரத்து 679 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று இருக்கின்றமை உறுதியாகியுள்ளது.

அதில் வெலிக்கடை சிறைச்சாலையில் 903 பேருக்கும் மஹஸின் சிறைச்சாலையில் 878 பேருக்கும் மஹர சிறைச்சாலையில் 819 பேருக்கும் தொற்று இருக்கின்றமை கண்டறியப்பட்டுள்ளது.

அதேவேளை கொழும்பு ரிமாண்ட் சிறையில் 441 பேருக்கும் நீர்கொழும்பு சிறைச்சாலையில் 368 பேருக்கும் இதுவரை தொற்று உறுதியாகியுள்ளது.

இவ்வாறு அடையாளம் காணப்பட்ட நோயாளிகளில் 4 ஆயிரத்து 363 கைதிகளும் 132 சிறைச்சாலை அதிகாரிகளும் தொற்றில் இருந்து குணமடைந்துள்ளனர்.

தற்போது 150 கைதிகள் மற்றும் 22 அதிகாரிகள் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனச் சிறைச்சாலைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

# கொழும்பு மத்திய அஞ்சல் பரிவர்த்தனை பணியாளர்கள் நால்வருக்குக் கொரோனா!

கொழும்பு – மத்திய அஞ்சல் பரிவர்த்தனையில் பணியாற்றும் 4 ஊழியர்களுக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் தொற்று உறுதி செய்யப்பட்ட அனைவரும் தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் என அஞ்சல்மா அதிபர் ரஞ்ஜித் ஆரியரத்ன தெரிவித்துள்ளார்.

மேலும், கொரோனாத் தொற்றுக்கு உள்ளானவர்களுடன் தொடர்பைப் பேணிய 26 பேர், இதுவரை அடையாளம் காணப்பட்டுள்ளனர் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கையில் கடந்த வெள்ளிக்கிழமை மாத்திரம், 940 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டதாக அரசாங்க தகவல் திணைக்களம் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஜெனிவாவில் இலங்கைக்கு எதிரான குற்றச்சாட்டுகள் அரசியல் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டவை!

## அமைச்சர் தாரக பாலசூரிய இப்படிக் கூறுகின்றார்



இலங்கை தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் அரசியல் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டவை என்பதை ஆதாரபூர்வமாக நிரூபிப்போம் என பிராந்திய உறவுகள் இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய தெரிவித்தார்.

கொழும்பில் கடந்த சனிக்கிழமை இடம் பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

சர்வதேச நாடுகளுடன் இலங்கை பொதுவான வெளிவிவகாரக் கொள்கைகளைப் பேணுகிறது. ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் ஒவ்வொரு வருடமும் பாரிய நெருக்கடிகளை ஏதாவதொரு வழிமுறையில் எதிர்கொள்கிறது. 2014 ஆம் ஆண்டுக்கு முற்பட்ட அரசாங்கம் ஜெனிவா விவகாரத்தை சிறந்த முறையில் கையாண்டது.

2015ஆம் ஆண்டு ஆட்சி மாற்றத்தின் பின்னர் இலங்கை தொடர்பான ஜெனிவா விவகாரம் அரசியல் மயப்படுத்தப்பட்டது. அரசியல் பழிவாங்கல்களுக்கு இராணுவத்தினருக்கு எதிராக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் ஆயுதமாக பயன்படுத்திக் கொள்ளப்பட்டன. 2015 தொடக்கம் 2019 வரையான காலப்பகுதிகளில் இலங்கை சர்வதேச அரங்கில் பாரிய நெருக்கடிகளை எதிர்கொண்டது. இதற்கு நல்லாட்சி அரசாங்கத்தின் பலவீனம் பிரதான காரணியாக அமைந்தது.

இலங்கைக்கு எதிராக ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் கொண்டுவரப்பட்ட 30(1) பிரேரணைக்கு முன்னாள் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர அரச தலைவருக்கும், நாடாளுமன்றத்துக்கும் அறிவிக்காமல் இலங்கை அரசாங்கம் அந்தப் பிரேரணைக்கு இணை அனுசரணை வழங்குவதாக இணக்கம் தெரிவித்தமை தேசத்துரோக செயற்பாடாகவே கருதவேண்டும்.

நாட்டுக்கு எதிராகப் பிரேரணைகளில் இருந்து அரசாங்கம் வெளியேறும் என ஜனாதிபதி நாட்டு மக்களுக்குப் பகிரங்கமாக அறிவித்தார். இதன் பிரகாரமே கடந்த வருடம் பெப்ரவரி மாதம் இடம்பெற்ற கூட்டத்தொடரில் 30/1 பிரேரணையில் இருந்து அரசாங்கம் விலகியது. இம்முறை இடம்பெறவுள்ள கூட்டத்தொடரில் இலங்கையை நெருக்கடிக்குள்ளாக்கும் வகையில் பல நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் ஆணையாளர் இலங்கை தொடர்பாக வெளியிட்ட அறிக்கையில் 16 விடயங்கள் நாட்டின் சுயாதீனத்துக்குப் பாதிப்பை ஏற்படுத்துவதாகவும், பொது சட்டத்துக்கு எதிரானதாகவும் காணப்பட்டது. இந்த விடயத்துக்குக் கடுமையான எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளோம்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் எதிர்வரும் 22ஆம் திகதி இலங்கை தொடர்பான விவாதம் இடம் பெறவுள்ளது. இம்முறை தீர்க்கமான தீர்மானங்கள் எடுக்கப்படும். பலம் வாய்ந்த நாடுகள் இலங்கைக்கு ஆதரவாகச் செயற்படும். அனைத்து நெருக்கடிகளுக்கும் இம்முறை தீர்வு காண முடியும். – என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir




# மெய்நிகர் வகுப்பறை 07


## Online Classroom

**ஜனனீ தேவானந்த்**
(முதுநிலை விரிவுரையாளர் -
(தகவல் தொழில்நுட்பம்),
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

மெய்நிகர் வகுப்புக்கள் கற்றலில் ஏற்றத்தாழ்வுகளை ஏற்படுத்துகின்றன. கிராமம் நகரம் சார்ந்த கற்றல் பாகுபாட்டை அதிகரிக்கின்றன என்று சென்ற தொடரில் பார்த்தோம். இது இணைய இணைப்பு வசதிகளின் அடிப்படையில் அதன் வேகம் கிடைக்கக்கூடிய வீச்செல்லை போன்றவற்றின் அடிப்படையிலேயே கிடைக்கும் என்பதால் இந்த ஏற்றத்தாழ்வு அதிகரிப்பதாகின்றது. கிராமப்புறங்களில் சிமாட் தொலைபேசி மற்றும் கணிணி வசதிகள் இல்லாத குடும்பங்களுக்கு மெய்நிகர் வகுப்பறைகள் கானல் நீராகின்றன

ஆகவே, இலங்கை வெற்றிகரமாக தனது கல்விச் செயற்பாடுகளை மெய்நிகர் தளத்துக்கு மாற்றிவிட்டதாக மார்தட்டிக் கொண்டாலும், எல்லோருக்கும் கல்வி அதுவும் சமமான கல்வி என்பது கேள்விக்குறியாகவே உள்ளது. இதனால் மாணவர்கள் கல்வியிலிருந்து இடைவிலகுவது அதிகரிக்குமெனலாம். எவ்வாறாயினும், தொற்றுநோய்களின் போது கல்வி செயல்முறைகளை எளிதாக்குவதற்கு அரசாங்கத்தின் அனைத்து முயற்சிகளும் கவனத்தை ஈர்க்கின்றன,

அரசு கல்வி முறையில் மெய்நிகர் வகுப்பறை என்பது அனைவருக்கும் அணுகக்கூடியதாக அமைய வேண்டும் என்ற கவலை ஒருபுறமிருக்கின்போது, யாழ்ப்பாணம் போன்ற பகுதிகளில் தனியார் கல்விகள் மெய்நிகர் வகுப்பறைகளுக்கு வேகமாக மாறிவருகின்றன. இது மிக இலாபம் தரும் செயற்பாடாகவும் அதிகளவில் மாணவர்களை ஓர் வகுப்பறையில் இணைத்துக் கொள்வதாகவும் அமைந்திருப்பதைக் காணலாம். இதனால் ஒரு பிரதேசத்தின் தனியார் கல்வி ஆசிரியரிடம் வெவ்வேறு பிரதேசத்தின் மாணவர்களும் மெய்நிகர் வகுப்பறைகளில் இணைந்து கல்விகற்கும் வாய்ப்பை அதிகரிக்கிறது. ஆனால், இவ்வாறான செயற்பாடுகளால் பாடசாலைகளைவிட்டு விலகிச்செல்லும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதையும் காணலாம். தனியார் பள்ளிகள் மற்றும் கல்விக்கூடங்கள் அரசாங்கத்தின் முன்முயற்சிகளின் எல்லைக்கு வெளியே உள்ளன. இது கட்டுப்பாடற்ற மெய்நிகர் வகுப்பறைகளை அதிகரிக்கின்றன. இவை அதிகளவில் மாணவர்கள் அணுகமுடியாத மெய்நிகர் வகுப்பறைகளாக மாற்றமடைந்து வருவதையும் காணலாம். ரியூசன் வகுப்புக்கள் கட்டுபாடுகளற்ற மெய்நிகர்க் கல்வியை வழங்குகின்றன எனலாம். குறிப்பாக மெய்நிகர் வகுப்பறைகளைப் புரிந்து கொள்ளாத அதன் அம்சங்களை முழுமையாகப் பயன்படுத்தாத மெய்நிகர் வகுப்பறைகளை உருவாக்குகின்றன. ஆகவே, மாணவர்கள் கல்வியிலிருந்து விலகுவதற்



கான வாய்ப்புக்களை தனியார் கல்விகள் அதிகரிக்கின்றன. இவற்றைக் கவனத்தில் கொள்ள வேண்டும். அரசாங்கங்கள் இதற்கான தெளிவான ஒன்லைன் கற்றல் கொள்கை ஒன்றை உருவாக்க வேண்டும்.

இதில் ஒன்லைன் கல்வியை அணுகுவதற்கான மிகப்பெரிய தடையாக நிரூபிக்கப்பட்டுள்ள சமூக ஏற்றத்தாழ்வுகளின் அப்பட்டமான யதார்த்தங்களை அரசாங்கம் கருத்தில் கொண்டு இந்த ஒன்லைன் கற்றல் கொள்கையை வடிவமைக்க வேண்டும்.

மாறாக, அரசியல்வாதிகள் முதல் அதிகாரத்துவத்தினர் வரை தனியார் நிறுவனங்கள் வரை அனைவரும் பாடத் திட்டத்தை நிறைவு செய்வதிலும், மாணவர்களை மதிப்பீடு செய்வதிலும், தேர்வுகளை ஒன்லைன் முறை மூலம் அவசரமாக நடத்துவதிலும், மட்டுமே அக்கறையாக இருக்கின்றமை கவலை தருகின்றது.

சமூகத்தின் மெய்நிகர் வகுப்பறைகளை அணுக முடியாத ஓரங்கட்டப்பட்ட பிரிவினரின் பிரச்சினைகளையும் கவலைகளையும் புறக்கணிக்காது அவற்றின் மீது கரிசனையை கொண்டிருக்க வேண்டும்.

கொவிட் 19 தொற்றுநோய் கல்வித்துறையில் ஏற்றத்தாழ்வுகளை அதிகரிக்கிறது. கல்விக்கட்டமைப்புக்களிலும் ஏற்றத்தாழ்வுகள் அதிகரிக்கின்றன. இந்த பேரிடர் காலத்தில் சில பாடசாலைகள் தமது கல்விச் செயற்பாடுகளை ஒன்லைன் மூலம் மேற்கொள்ள ஆரம்பித்திருக்கின்றன. அரசாங்கத்தின் உதவியுடன் இலவச இணைய வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மெய்நிகர் வகுப்பறைகளைச் சிறந்த முறையில் மேற்கொள்வதற்கு வசதியாக சிமாட் போர்ட் வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இது இலங்கையைப் பொறுத்தவரை மிகக்குறைந்த அளவிலேயே ஒருசில பாடசாலைகளுக்கு மட்டும் கிடைக்கின்றது. இது கிராமப்புற, நகர்ப்புற, பணக்கார மற்றும் ஏழை என்ற வேறுபாட்டை அதிகரிக்கிறது. மெய்நிகர் வகுப்பறைகளை உருவாக்குவதில் பள்ளிக் கல்வியில் அதிகரித்து வரும் கட்டமைப்பு ஏற்றத்தாழ்வுகள் பாரதூரமான கல்வி வீழ்ச்சிக்கு எதிர்காலத்தில் வித்திடலாம். இதனால் விரைவான ஓர் ஒன்லைன் கற்றல் கொள்கைத் திட்டத்தை கல்வித்துறை உருவாக்க வேண்டும்.

ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள், பாடசாலைக் கல்வியின் சீர்திருத்தத்துக்கு தொழில்நுட்பம் மையமாகத் திசைதிருப்பும் போது அது முன்னோடியானதாக சாதகமான விளைவுகள் தருவதாக உருவாவதற்கு நீண்ட கடினமான பயணத்தை மேற்கொள்ள வேண்டும்.

தற்போது தொற்றுநோய் பரவல் காலத்தில் கல்வியில் முன்னோடியில்லாத வேகத்தை அவதானிக்க முடிகிறது. தற்போதைய சூழலில் கல்வி, பள்ளிப்படிப்பு தொடர்பான அனைத்து சிக்கல்களையும் எதிர்த்துப் போராடுவதற்கான திட்டமிடல்கள் விரைவாக மேற்கொள்ளப்பட வேண்டும். இதனைக் கையாள்வதில் பாடசாலைகள் தொடக்கம் பல்கலைக்கழகங்கள் வரை பீதி மனப்பாங்கில் இருக்கின்றமையையும் காணலாம். ஆகவே அனைத்து கற்பவர்களுக்கும் சென்றடைவதைக் கருத்திற் கொண்டு மெய்நிகர் வகுப்பறைகள் திட்டமிடப்பட வேண்டும்.

மெய்நிகர் உலகிற்கு மாற்றுவதற்கான அவசரம், நிதானமானதாக இருக்கவேண்டியிருக்கிறது. இதில் மேலிருந்து கீழ் அதாவது தேசியப்பாடசாலையிலிருந்து கிராமப் பாடசாலை என்ற சிந்தனையை தவிர்க்க வேண்டும். நகரத்திலிருந்து கிராமத்துக்கு என்பதையும் மாற்றிமைக்க வேண்டும்.

இலங்கையைப் பொறுத்தளவில் பள்ளி அமைப்பு உயரடுக்கிலிருந்து தாழடுக்கு என்ற அடிப்படையில் காணப்படுவதும் தனியார் பள்ளிகள் மற்றும் அரசுப் பள்ளிகள் என்ற அடுக்குமுறை வகைப்படுத்தலும், ஏராளமான சிக்கல்களை உருவாக்குகின்றன.

இந்த சூழ்நிலைகளில், பள்ளிக் கல்வி சீர்குலைவைத் தணிக்க ஒருதலைப்பட்ச அணுகுமுறை தீர்வாக அமையப்போவதில்லை. பல பரிமாணங்களின் மாறுபட்ட சிக்கல்களைத் தீர்க்க அதிகாரிகளால் மட்டுமே முடியும் என்று எண்ணுவது தவறு.

இதில் சிரியா, கென்யா மற்றும் பிற ஆபிரிக்க நாடுகளிலிருந்து கற்றுக் கொண்ட பாடங்களைக் கவனத்தில் கொள்ளலாம். அங்குள்ள சில படிப்பினைகளிலிருந்து நாம் சிலவற்றைக் கற்றுக்கொள்ளலாம். அந்த நாடுகள் மோதல்கள், அகதிகள் மற்றும் எபோலா போன்ற தொடர்ச்சியான தொற்றுநோய்கள் போன்றவற்றின் கடினமான காலங்களில் குழந்தைகளின் கல்விக்கான ஏற்பாடுகளைச் செய்த அனுபவத்தைக் கொண்டுள்ளன.

பல ஆண்டுகளாக அவர்கள் மாணவர்களின் பள்ளிப்படிப்பைத் தொடர பல உத்திகளை உருவாக்கியுள்ளனர். பின்தங்கிய குழுக்களைச் சேர்ந்த குழந்தைகளுக்கு, வானொலி, தொலைக்காட்சி போன்ற குறைந்த தொழில்நுட்ப ஊடகங்கள் அங்கு பயனுள்ளனவாக இருந்துள்ளன. இந்த இரண்டையும் கூட அடைய முடியாத சூழ்நிலைகளில் பயணிப்பது பற்றிய அனுபவங்களும் அவர்களுக்கு உள்ளன.

எபோலா நோய்த்தொற்று நெருக்கடியைச் சமாளித்த அனுபவத்தை இந்த நாடுகள் கொவிட் நோய்த் தொற்று ஏற்பட்ட போது ஏற்பட்ட கல்வி சீர்குலைவுக்கு தீர்வு காண ஒரு சிறந்த மூலோபாயத்தைத் தயாரிக்க முடிந்துள்ளது. இவற்றின் கற்றுக்கொண்ட அனுபவங்களிலிருந்து நாம் திட்டமிடமுடியும்.

(தொடரும்...)

# மக்களின் முகபாவத்தை வைத்தே அவர்கள் பிரச்சினையை அறியலாம்!

## நாடாளுமன்ற உறுப்பினர் திலீபன் தெரிவிப்பு

வறுமையையும் கஷ்டங்களையும் சந்தித்துள்ளமையால் மக்களின் முகபாவத்தை வைத்தே அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை என்னால் அறிந்து கொள்ள முடியுமென வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கு.திலீபன் தெரிவித்துள்ளார்.

வவுனியா – மணிபுரத்தில் இடம்பெற்ற சந்தை கட்டட திறப்பு விழாவில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

குறித்த நிகழ்வில் கு.திலீபன் மேலும் கூறியுள்ளவை வருமாறு:–

மக்கள் நலன் சார்ந்த பல திட்டங்களை அரசாங்கம் முன்னெடுத்து செல்கின்ற போதிலும் பல இடர்பாடுகளைச் சந்தித்த வண்ணமே உள்ளது.

இதற்குக் காரணம், இந்த அரசாங்கம் மற்றும் அரசாங்கத்தை சார்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் நிரந்தரமாக அந்த ஆசனத்தில் இருந்து விடுவார்களோ என்ற அச்சத்தில் அவதூறுகளை சிலர் பரப்பி வருகின்றனர். ஆனால் இத்தகைய அவதூறுகளால் அரசாங்கத்துக்கு எந்தவொரு பாதிப்பும் ஏற்படாது.

இதேவேளை, வறுமையையும் கஷ்டங்களையும் சந்தித்தே நான் இந்த நிலைமைக்கு வந்துள்ளேன் ஆகவே, மக்களின் முகபாவத்தை வைத்தே மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை நான் அறிந்து கொள்வேன். – என அவர் குறிப்பிட்டுள்ளார்.

### உயிர்த்த ஞாயிறு தாக்குதல்:

# குற்றப்பத்திரிகை தாக்கல் செய்வதற்காக 30 பேரின் தகவல்கள் சட்டமா அதிபரிடம்



உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் 30 பேருக்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்வதற்கான தகவல்கள் அனைத்தும் சட்டமா அதிபரிடம் கையளிக்கப்பட்டுள்ளன என பொது மக்கள் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

அத்துடன் உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் தொடர்புடைய 251பேர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் எனவும் அவர் கூறினார்.

கொழும்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இதனைக் கூறினார்.

கர்தினாலுக்கு கத்தோலிக்க மக்களுக்கு பொறுப்பு சொல்ல வேண்டியுள்ளமையை நாம் ஏற்றுக்கொள்கின்றோம். மனித கொலை மற்றும் அதற்கு திட்டம் தீட்டியமை தொடர்பில் சட்டமா அதிபருக்கு நாம் தகவல்களை முன்வைத்துள்ளோம். இறுதியறிக்கை சட்டமா அதிபரிடம் ஒப்படைக்கப்பட்ட பின்னரே வழக்கு தொடரப்படும். வழக்கு தாக்கல் செய்ததன் பின்னரே நாம் எப்படி வேலை செய்கின்றோம் என்பது தெரிய வரும். பொலிஸாரிடம் இருந்து பெறவேண்டிய அனைத்து ஆலோசனைகளும் முடிந்துள்ளன. எனக் கூறினார்.

தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர் –

ஜனிவா எப்போதும் எமக்கு எதிராகவே செயற்படுகின்றது. எமக்கு பாதிப்பான 30ஃ1 தீர்மானத்துக்கு வழங்கிய இணை அனுசரணையில் இருந்து நாம் விலகியுள்ளோம். அதனூடாகப் பல நாடுகள் எமக்கு ஒத்துழைப்பு வழங்க முடிவு செய்துள்ளன. இம்முறை 5 நாடுகள் இலங்கைக்கு எதிரான யோசனையை முன்வைக்கத் தயாராகவுள்ளன. அந்த யோசனையை நிராகரிக்கவே நாம் எதிர்ப்பார்க்கின்றோம். – என்றார்.

# ‘மண்ணையும் பெண்ணையும் காப்போம்’ ஹற்றனில் கவனவீர்ப்புப் போராட்டம்!





‘மண்ணையும் பெண்ணையும் காப்போம்’ எனும் தொனிப்பொருளில் ஹற்றன் மல்லிகைப்பூ சந்தியில் மலையகப் பெண்களின் கவனவீர்ப்பு நிகழ்வு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

பெண்கள் பச்சை நிற ஆடை அணிந்திருந்ததுடன், ‘நூறு கோடி மக்களின் எழுச்சி’, ‘இயற்கை உணவுகள் உண்போம்’, ’ஆரோக்கியமான வாழ்வை வாழ்வோம்’, ‘இயற்கையைக் காப்போம்’ போன்ற வசனங்களை எழுதிய பதாதைகளைக் காட்சிப்படுத்தியவாறு மிகவும் அமைதியான முறையில் சுகாதார வழிமுறைகளுக்கு அமைய நேற்று (ஞாயிற்றுக்கிழமை) காலை கவனவீர்ப்பு இடம்பெற்றது.

இயற்கையற்ற உணவுப் பயன்பாட்டின் காரணமாக உலகில் வாழும் நூறு கோடி மக்கள் பல்வேறு தொற்று நோய்களுக்குள்ளாகி வருகின்றமையுடன் இயற்கை அழிவின் காரணமாக பல்வேறு பிரச்சினைகளுக்கும் முகங்கொடுத்து வருவதாக கவனவீர்ப்பில் ஈடுபட்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

அத்தோடு, பெண்களுக்கும் மண்ணுக்கும் நெருங்கிய தொடர்பு காணப்படுவதாகவும், இதனால், மண்ணையும் பெண்ணையும் காக்கின்ற பொறுப்பு பெண்களுக்கு இருப்பதாகவும் சுட்டிக்காட்டப்பட்டது.

இதன்போது, 18 தோட்டங்களைச் சேர்ந்த சுமார் நூறுக்கு மேற்பட்ட பெண்கள் கலந்துகொண்டனர்.

# தனியார் வைத்தியசாலை ஊழியர்களுக்கு அடுத்த வாரம் முதல் கொரோனா தடுப்பூசி

தனியார் வைத்தியசாலைகளில் பணிபுரியும் வைத்தியர்கள் மற்றும் ஊழியர்களுக்கு கொவிட் தடுப்பூசி வழங்கும் நடவடிக்கை எதிர்வரும் வாரம் முதல் முன்னெடுக்கபப்படவுள்ளது.

அதன்படி, இந்தத் திட்டம் எதிர்வரும் புதன்கிழமை முதல் முன்னெடுக்கப்படும் என விசேட வைத்தியர் அமல் ஹர் த சில்வா தெரிவித்துள்ளார்.

பிரதான வைத்தியசாலைகளில் இந்த நடவடிக்கையை முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

சாதாரண தனியார் வைத்தியசாலைகளில் உள்ள வைத்தியர்களுக்கு அருகில் உள்ள பிரதான வைத்தியசாலைகளில் இலவசமாக இந்தத் தடுப்பூசி வழங்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# சீனி, இனிப்பு பண்டங்களுக்காக 5 ஆயிரம் கோடி ரூபா செலவு!

## இது வெறும் ஒரு வருடத்தில் மட்டுமே

நாட்டு மக்கள் ஒரு வருடத்தில் சுமார் 5 ஆயிரம் கோடி ரூபா பெறுமதியான வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட சீனி மற்றும் இனிப்பு பண்டங்களை பயன்படுத்தியிருக்கின்றமை கண்டறியப்பட்டுள்ளது.

இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ள 2020 ஆம் ஆண்டு அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

2019ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2020 ஆம் ஆண்டில் நாட்டுக்கு இறக்குமதி செய்யப்பட்ட பெரும்பாலான பொருள்களுக்கான இறக்குமதி செலவு குறிப்பிடத்தக்க வகையில் குறைந்துள்ளது. இருப்பினும், சீனி மற்றும் இனிப்பு பண்டங்களுக்கான இறக்குமதி செலவு குறிப்பிடத்தக்க அளவு அதிகரித்துள்ளது. இதற்காக 75.9 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவிடப்பட்டுள்ளன.

வெளிநாடுகளிலிருந்து சீனி மற்றும் இனிப்பு பண்டங்களை நாட்டுக்கு கொண்டு வருவதற்காக 2019ஆம் ஆண்டில் செலவிடப்பட்ட தொகை 201.2 அமெரிக்க மில்லியன் டொலர்களாகும். இருப்பினும் இத்தொகை கடந்த வருடத்தில் 277.1மில்லியன் அமெரிக்க டொலர்களாக அதிகரித்துள்ளது.

இது இலங்கை நாணயத்தில் சுமார் 50 ஆயிரம் மில்லியன் என்று கணிப்பிடப்படுகின்றது. இது 37.7 வீத அதிகரிப்பாகும்.

இதேவேளை எரிபொருளுக்கான இறக்குமதி செலவு 2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2020ஆம் ஆண்டு குறிப்பிடத்தக்க வகையில் குறைந்துள்ளது.

2019ஆம் ஆண்டில் மசகு எண்ணெய், சுத்திகரிக்கப்பட்ட எரிபொருள் மற்றும் நிலக்கரி ஆகியவற்றை நாட்டுக்கு இறக்குமதி செய்வதற்காக 3,891.6 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவிடப்பட்டுள்ளது.

இது கடந்த வருடத்தில் 2,541.6 மில்லியன் அமெரிக்க டொலர்களாக குறைவடைந்துள்ளது. அதாவது 34.7 மில்லியனாக குறைவடைந்துள்ளது.

தனியார் வாகன இறக்குமதி 2019ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2020ஆம் ஆண்டில் 65வீத குறைவடைந்துள்ளமை விசேட அம்சமாகும். 2019 ஆம் ஆண்டில் தனியார் வாகன இறக்குமதிக்காக 815.7 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவிடப்பட்டுள்ளன.

2020ஆம் ஆண்டில் இத்தொகை 282.9 மில்லியன் அமெரிக்க டொலர்களாகக் குறைவடைந்துள்ளது. 2020 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதத்தில் இலங்கைக்கு மேற்கொள்ளப்பட்ட தனியார் வாகன இறக்குமதிக்கான செலவு 0.5 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும்’ எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இந்திய உயர் ஸ்தானிகராலயத்தில் பணிபுரியும் ஊழியருக்கு கொரோனா

கொழும்பில் அமைந்துள்ள இந்திய உயர் ஸ்தானிகராலயத்தில் பணிபுரியும் இந்திய செயலக ஊழியருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்த தகவலை இந்திய உயர் ஸ்தானிகராலயம் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) வெளியிட்டுள்ள அறிவிப்பொன்றில் உறுதிப்படுத்தியுள்ளது.

தற்சமயம் குறித்த அதிகாரி இலங்கை அரசாங்கத்தால் பரிந்துரைக்கப்பட்டுள்ள கொவிட் சுகாதார வழிகாட்டல்களின் கீழ் வைக்கப்பட்டுள்ளார் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, உயர் ஸ்தானிகராலய வளாகங்கள் தற்சமயம் கிருமி நீக்கம் செய்யப்பட்டுள்ளன. மேலும் நிலையான நெறிமுறைகளின்படி தேவையான அனைத்து நடவடிக்கைகளும் வலுப்படுத்தப்பட்டுள்ளன எனவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது

# எந்தவோர் அரசும் இராணுவத்தை காட்டிக்கொடுக்காது! - பொன்சேகா

தேசிய கொள்கைகளின்படி, எந்த அரசாங்கமும் நாட்டின் இராணுவ வீரர்களை காட்டிக் கொடுக்காது என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

பெலிஅத்த பகுதியில் வைத்து ஊடகவியலாளர்கள் கேட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இராணுவத்தினரைக் காட்டிக் கொடுப்பதும் இல்லை, அவர்களுக்கு ஆபத்து ஏற்பட இடமளிப்பதும் இல்லை எனத் தெரிவித்துள்ளார்.

# ஒரு லட்சத்து 86 ஆயிரத்துக்கும் மேல் கொரோனாத் தடுப்பூசி செலுத்தப்பட்டது!

இலங்கையில் இதுவரையில் ஒரு லட்சத்து 86 ஆயிரத்து 654 பேருக்குக் கொரோனாத் தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளன.

நாட்டில் கடந்த சனிக்கிழமை மாத்திரம் 7 ஆயிரத்து 457 பேருக்கு கொரோனாத் தடுப்பூசிகள் வழங்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த மாதம் 29 ஆம் திகதி இலங்கையில் கொரோனாத் தடுப்பூசி போடும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## தினம் ஒரு விவசாயத் தகவல்

### தக்காளி நாற்றுமேடையில் விதைகளை நடல்

மார்ச் நடுப்பகுதியில் அல்லது ஆகஸ்ட் நடுப்பகுதியில் நாற்றுமேடையில் நடலாம். விதைகளை நடமுன் அவற்றைத் தொற்று நீக்கம் செய்ய வேண்டும். இதற்கு கப்ரான் அல்லது திராம் போன்ற பங்கசு நாசினிகளைப் பயன்படுத்தலாம். 125 கிராம் விதைக்கு 2 கிராம் பங்கசு நாசினி போது மானதாகும்.

நாற்றுமேடையில் விதைகளை வரிசைகளுக்கிடையே 12 - 15 சதம மீற்றர் இடை வெளியில் நடுகை செய்யலாம். விதைகளை 0.5 - 1 ச.மீ அழத்தில் நட்டு தூர்வையான மண் படையால் மூடவும். இதன்பின் இப் பாத்தியை சுத்தமான வைக்கோல் படையால் மூடவும்.

அதிக சூரிய வெப்பம், கடும் மழை என்பனவற்றிலிருந்து நாற்றுக்களைப் பாதுகாக்க பாத்தியின் மேல் கூடாரமொன்றை அமைக்கவும். 7 நாள்களின் பின் பத்திரக் கலவையாக இட்ட வைக்கோலை அகற்றவும். 8 - 10 நாள்களின் பின் நாற்றுக்களைக் கையால் பிடுங்கவும்.

நாற்றுமேடையிலிருந்து நாற்றுக்களை பிடுங்குவதற்கு சில நாள்களுக்கு முன்னர் அவற்றை வன்மைப்படுத்த வேண்டும். இதற்கு நீரைக் குறைவாக ஊற்றுவதோடு, நாற்றுக்கள் மீது சூரிய ஒளியையும் படச் செய்ய வேண்டும்.

ர.ரஜீவன் - விவசாய பட்டதாரி

காலைக்கதிர் Kalaikkathir

# எவரும் வரலாம் - போகலாம்; எங்கள் பயணம் தொடரும்!

## தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ எம்.பி. தெரிவிப்பு



எவரும் வரலாம். எவரும் போகலாம். எங்கள் முற்போக்குப் பயணம் தொடரும்.

- இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவரது முகநூல் பதிவு வருமாறு:-

மலையக சமகால வரலாற்றில், தமிழ் முற்போக்குக் கூட்டணி அதிகாரத்தில் இருந்த காலமே, அதிக காத்திரமான காரியங்கள் நிகழ்ந்த பொற்காலம். மனச் சாட்சியுள்ள எவரும் இதை மறுத்திட முடியாது. ஆரம்பித்து முடிவுறாத பல காரியங்கள் இன்னமும் உள்ளன. அவற்றை முடித்திட நாம் மீண்டும் எழுந்து அதிகாரத்துக்கு வருவோம். அதுவரை எதிரணியில் இருந்து காத்திரமான தேசிய பணியை நாம் ஆற்றுகிறோம்.

கீழ்வரும் ஆவணம், தமிழ் முற்போக்குக் கூட்டணியின், 2015 முதல் 2019 வரையிலான நான்கு (4) வருட சாதனைகளை பட்டியலிடுகிறது.

எங்கள் முழு ஆட்சிகாலம், 2018 வருட ஒக்டோபர் மாத அரசியலமைப்பு சதியின் மூலமும், பின் 2019ஆம் வருடம் முன்கூட்டியே நாடாளுமன்றம் கலைக்கப்பட்டதனாலும், அதிகாரத்தில் இருந்த காலம் நான்கு (4) வருடங்களாக சுருங்கியது.

இந்த நான்கு (4) வருட சாதனைகளை, எங்களுக்கு முன் மலையக தமி ழர்களை பிரதிநிதித்துவம் செய்து, 1978 முதல் 2015 வரை சுமார் நாற்பது (40) வருட காலமாக, மாறி மாறி வந்த ஒவ்வொரு ஆட்சியிலும் அதிகாரத்தில் இருந்த ஏனைய கட்சிகளின் செயற்பாட்டுடன் ஒப்பிட்டு பாருங்கள்.

1.தோட்டங்களில் ஏழு பேர்ச் காணி வழங்கலுக்கான அமைச்சரவைபத்திரம்அமைச்சரவையில் சமர்பிக்கப்பட்டு, ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

2.நீண்ட காலமாக நின்று போயிருந்த, இந்திய அரசின் பெருந்தோட்ட வீடமைப்பு உதவி திட்டம், இலங்கை - இந்திய அரசுகளின் ஒப்புதலுடன், இந்திய அரசுக்கும், புதிய மலைநாட்டு கிராமங்கள் அமைச்சுக்கும் இடையில் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தையடுத்து, நடைமுறைக்கு வந்தது.

3.அதன்படி, தோட்டத் தொழிலாளருக்கான சொந்த உறுதிப் பத்திரம் கொண்ட தனி வீடுகள் கட்டப்படும் திட்டம் மலைநாட்டில் ஆரம்பிக்கப்பட்டது.

4.அவ்விதம், கட்டப்படும் குடியிருப்புகள் மலையகத்தில் புதிய கிராமங்களாக அறிவிக்கப்பட்டு, மலைநாட்டின் மற்றும் இந்திய, இலங்கை பழம்பெரும் தலைவர்களின் பெயர்களால் பெயரிடப்பட்டன.

5.நுவரெலிய மாவட்டத்தில், மேலதிக புதிய ஆறு பிரதேச சபைகள் அமைக்கும் தீர்மானம், அரசுக்குள் நடைபெற்ற பெரும் வாத விவாதங்களுக்கு பின்னர், அரசாங்கத்தால், ஏற்றுக்கொள்ளப்பட்டு, புதிய பிரதேச சபைகள் அமைக்கப்பட்டு, மலையக தமிழ் மக்களால் அரசியல் அதிகாரப் பகிர்வு உண்மையாக உணரப்பட்டது.

6.மலையக மக்களால் வாக்களித்து தெரிவு செய்யப்படும் பிரதேச சபைகளுக்கு, தம்மை தெரிவு செய்யும் தோட்ட புறங்களுக்கு, அபிவிருத்தி நிதி ஒதுக்கீடு செய்ய முடியாது என 1987 முதல் சுமார் 30 வருடங்களாக இருந்த, மலையக பிரதேச சபை அதிகார எல்லை சட்டத்தின் கொடூரமான 33ம் இலக்க விதி, அதற்கான திருத்த சட்டமூல அமைச்சரவை பத்திரம், அமைச்சரவையில் சமர்பிக்கப் பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்டு, நாடாளுமன்றத்தில் சட்டமாகி, இப்போது பிரதேச சபைகளின் அதிகார வரம்பு, தோட்டபுறங்களுக்கு உள்ளேயும், அதிகாரபூர்வமாக விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

7.மலையக அபிவிருத்திக்கான தனியான அதிகார சபை அமைக்கும் அமைச்சரவை பத்திரம், அமைச்சரவையிலும், நாடாளுமன்றத்திலும் சமர்ப்பிக்கப்பட்டு, இரு சந்தர்ப்பங்களிலும் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு, இன்று சட்டமாகி, பெருந்தோட்ட அபிவிருத்தி அதிகாரசபை அமைக்கப்பட்டுள்ளது.

8.சுமார் 300 தோட்டபுற பாடசாலைகளுக்கு, அவ்வவ் தோட்டங்களில், அவசியப்படும் போது, மேலதிக காணிகளை சுவீகரிக்கும் அதிகாரத்தை கல்வி துறைக்கு வழங்கும் அமைச்சரவை பத்திரத்தை அமைச்சரவை ஏற்றுக் கொண்டு அங்கீகரித்தது.

9.மலையக மக்களுக்கு, தேசிய அர சியலமைப்பு பணியில், ஏனைய இனங் களுக்கு வழங்கப்படும் அதே சம அந்தஸ்தும், காத்தி ரமான சமபங்கும், வழங்கப்பட்டன.

10.தேசிய நிர்வாக அதிகார பரவலாக்கும் கொள்கையின்படி, புதிய ஆறு பிரதேச சபைகளுக்குள்ளும், ஏனைய பெருந்தோட்ட பிரதேசங்களிலும், புதிய பிரதேச செயலகங்களும், கிராம சேவையாளர் பிரிவுகளும் அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

11. பெருந்தோட்ட மறுசீரமைப்பு இலக்கில், தோட்ட தொழிலாளர்களின் வருமானத்தை கூட்டும் வெளிப்பயிர்செய்கை வருமான திட்டம் சீரமைக்கப்பட்டு, தோட்ட தொழிலாளர்களை, சிறு நில உடைமையாளர்களாக (மலையக விவசாயி) ஆக்கும் திட்டம் பற்றிய கொள்கை முடிவு எடுக்கப்பட்டு, அது, தமிழ் முற்போக்குக் கூட்டணி பங்கு கொண்டு ஆதரித்த, 2019 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளரின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் சேர்க்கப்பட்டது. இது இப்போது சாதகமான எதிர்கால பயன்பாட்டுக்கான ஆவணம்.

12. மலையக பல்கலைக்கழகம் அமைப்பது தொடர்பில், தேசிய ஒருமைப்பாடு அமைச்சின் முன்னெடுப்பில் 'மலையக சான்றோர் ஆய்வுக்குழு' அமைக்கப்பட்டதுடன், அக்குழு கூடி ஆராய்ந்து, பல்கலைக்கழகம் தொடர்பான சாத்தியப்பாட்டு அறிக்கை தயாரிக்கப்பட்டது.

13.தேசிய ஒருமைப்பாடு, அரசகரும மொழிகள், சமூக மேம்பாடு, இந்து கலாசாரம், மலைநாட்டு புதிய கிராமங்கள், தோட்ட உட்கட்டமைப்பு, சமூக அபிவிருத்தி ஆகிய அமைச்சரவை அமைச்சுகள் மற்றும் கல்வி இராஜாங்க அமைச்சு ஆகியவை மூலமாக மத்திய, மேல், சப்ரகமுவா, ஊவா, வட, கிழக்கு மாகாணங்களில் செய்யப்பட்ட பல மில்லியன் ரூபா பெறுமதியான அபிவிருத்தி பணிகள் இங்கே கூறப்படவில்லை - என்றுள்ளது.

# அரசைப் பிளவுபடுத்த சர்வதேச சதி முயற்சி!

## பிரதமர் மஹிந்த கண்டுபிடிப்பு



ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி தலைமையிலான மிகவும் சக்தி வாய்ந்த அரச கூட்டணியைப் பிளவுபடுத்த உள்நாட்டில் மட்டுமல்ல சர்வதேச ரீதியிலும் சதி முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்று எமக்குத் தகவல் கிடைத்துள்ளது. இந்தச் சதித் திட்டங்கள் ஒருபோதும் வெற்றி பெறாது. எமது கூட்டணியை எந்தத் தரப்பாலும் பிளவுபடுத்த முடியாது.

- இவ்வாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

எமது அரசு நாட்டு மக்களின் ஆணையால் அமைக்கப்பட்டது. ஜனாதிபதித் தேர்தலிலும், நாடாளுமன்றத் தேர்தலிலும் மக்களின் அமோக வாக்குகளால்தான் ஆட்சி அதிகாரத்தை மீட்டெடுத்தோம். எனவே, குறுக்கு வழியில் எமது ஆட்சியை எவ ரும் கைப்பற்ற முடியாது எனவும் அவர் கூறினார்.

ஆளும் கட்சியின் சிரேஷ்ட தலைவர்களுடன் நேற்று நடத்திய விசேட சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு கூறி னார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தலைமைப் பதவியைப் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களே எனக்குத் தந்தார்கள். கட்சியில் ஏகோபித்த ஆதரவுடன் தலைமைப் பதவியைப் பொறுப்பெடுத்தேன்.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தலைமைப் பதவியை நான் ஏற்கும்போது மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றுவோம் என்று சபதம் செய்தேன். அதற்கமைய நாட்டு மக்களின் பேராதரவுடன் அதை நிறைவேற்றிக் காட்டியிருக்கின்றேன்.

இந்தநிலையில், ஆளும் தரப்புக்குள் பிளவு என்றும், அமைச்சர் விமல் வீரவன்ஸவின் தலைமையில் பங்காளிக் கட்சிகள் தனிவழியில் என்றும் சில உள்நாட்டு, வெளிநாட்டு ஊடகங்கள் பொய்யான செய்திகளை வெளியிட்டு வருகின்றன.

ஊடகங்கள் சொல்வது போல் அமைச்சர் விமல் வீரவன்சவுக்கும் எமக்கும் இடையில் எந்தப் பிரச்சினையும் இல்லை. நாம் மீண்டும் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்ற விமலின் பங்களிப்பு அளப்பரியது.

பலமிக்க எமது அரசை - கூட்டணியை எந்தத் தரப்பாலும் பிளவுபடுத்த முடியாது - என்றார்.

# கிளிநொச்சியில் மணல் அகழ்வில் முறுகல் நிலை; வாள்வெட்டில் முடிந்ததில் ஒருவர் சாவு; மூவர் காயம்

(ந.லோகதயாளன்)


கிளிநொச்சி, பெப்.14

கிளிநொச்சியில் மணல் அகழ்வில் ஏற்பட்ட முறுகல் நிலை வாள் வெட்டில் முடிந்ததில் ஒருவர் உயிரிழந்துள்ளார். மற்றொருவர் வெட்டுக்காயங்களுடன் ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்றுவருகிறார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தத் தாக்குதலில் காயமடைந்த மேலும் இருவரும் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்திய சாலையில் சிகிச்சை பெறுகின்றனர்.

இந்தச் சம்பவம் இன்று முற்பகல் உமையாள்புரத்தில் இடம்பெற்றது.

பரந்தன், உமையாள்புரத்தைச் சேர்ந்த சுந்தரலிங்கம் சுமன் (வயது - 35) என்பவரே உயிரிழந்தவராவார்.



சட்டத்துக்குப் புறம்பாக மணல் அகழ்வில் ஈடுபட்டமை தொடர்பில் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியதாக இரண்டு தரப்புகள் இடையே மோதல் இடம்பெற் றுள்ளது. அதில் ஒரு தரப்பு, மற்றைய தரப்பைச் சேர்ந்த நால்வர் மீது வாள்வெட்டுத் தாக்குதலை மேற்கொண்டது எனப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# ஜெனிவா அமர்வில் 23இல் தினேஷ் உரை



ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 46 ஆவது கூட்டத் தொடரின் ஆரம்பத்தில் இலங்கை தனது கருத்துக்களை முன்வைக்கும் என்று வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 22ஆம் திகதி முதல் மார்ச் 23 வரை நடைபெறவுள்ள கூட்டத் தொடர் அமர்வின் ஆரம்ப நாள்களில் நடைபெறும் உயர்மட்ட கூட்டங்களில் பொதுவாக நாடுகளின் உயர்மட்ட பிரதிநிதிகள் தங்கள் கருத்துக்களை முன்வைப்பர்.

இம்முறை காணொளி ஊடாகவே மாநாடு நடைபெறும். தினேஷ் குணவர் தன இம்மாதம் 23 ஆம் திகதி உரையாற்றுவார் என எதிர்ப்பார்க்கப்படுகின்றது.

நிலையில் கனடா, பிரிட்டன், ஜேர்மன், மொண்டிநீக்ரோ, வடமசிடோனியா ஆகியவற்றின் சார்பாக பிரிட்டனின் வதிவிடப் பிரதிநிதி ஜூலியன் பிரெய்த்வெயிட் இலங்கை மீதான அறிக்கையைச் சமர்ப்பிக்கவுள்ளார்.

இலங்கையின் முன்மொழிவுடன் ஏற்கனவே வழங்கப்பட்ட தீர்மானத்திற்கு இலங்கை மேற்கொண்ட பதில் நடவடிக்கைகள் பற்றிய அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு மனித உரிமைகள் ஆணையாளர் தயாரித்த அறிக்கையும் இந்த அமர்வில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இந்த அறிக்கைகள் மூலம் பலத்த குற்றச்சாட்டுக்களை எதிர்நோக்கும் இலங்கை தனது நிலைப்பாட்டை அறிவிக்க இது ஒரு தருணம் என்றாலும் வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தனவுக்கு இது மிகவும் சவால் நிறைந்த நாள்களாக இருக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த உயர்மட்டக் கூட்டத்தில் கருத்துக்களைத் தெரிவிக்கவிருக்கும் இதர நாடுகளின் பிரதிநிதிகள் தரப்பில், இந்திய வெளிவிவகார அமைச்சர் சுப்பிரமணியம் ஜெய்சங்கர், அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் மற்றும் சீனாவின் வெளிவிவகார அமைச்சர் ஆகியோர் அடங்குவர்.

குழும நாடுகளால் முன்வைக்கப்படும் புதிய பிரேரணை, ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட 30/1 - 40/1 தீர்மானங்கள் தொடர்பில் இலங்கை மேற்கொண்ட நடவடிக்கைகள் பற்றியே இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

கடந்த 2019 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின் பின்னர், இத் தீர்மானத்திற்கு நல்லாட்சி அரசு வழங்கிய இணை அனுசரணையிலிருந்து விலகியதாக புதிய அரசு அறிவித்தது.

இந்நிலையில், கடந்த மாதம் ஐ.நா. ஆணையாளர் வெளியிட்ட இலங்கை தொடர்பான புதிய அறிக்கையில், கடந்த கால மனித உரிமை மீறல்களை இலங்கை கவனிக்கத் தவறியமையானது இத்தகைய மீறல்கள் மீண்டும் மீண்டும் நிகழும் அபாயத்தை ஏற்படுத்தியுள்ளது எனக் குறிப்பிட்டிருந்தார்.

அத்தோடு கடுமையான மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டதாகக் கூறப்படும் குற்றவாளிகளுக்கு எதிராக சொத்து முடக்கம் மற்றும் பயணத் தடை போன்ற தடைகளையும் ஐ.நா. ஆணையாளர் முன்மொழிந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, கொரோனாத் தொற்றை வெற்றிகரமாகக் கட்டுப்படுத்தும் நாடுகளில் ஒன்றாக இலங்கை இருக்கும்போது, அதனை இழிவுபடுத்துவதை நோக்கமாகக் கொண்டு 16 தவறான விளக்கங்கள் அடங்கிய ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கையை நிராகரிக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது எனவும் வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தன மேலும் கூறியுள்ளார்.

# யாழ். தீவுகளின் அபிவிருத்திப் பணியை சீனாவிடமிருந்து பிடுங்கியது இந்தியா!

சீனாவின் பங்களிப்புடன் யாழ்ப்பாணத்தின் நெடுந்தீவு, நயினாதீவு மற்றும் அனலைதீவு ஆகிய தீவுகளில் மேற்கொள்ளப்படவிருந்த அபிவிருத்திப் பணிகள் தற்போது இந்தியாவின் உதவியுடன் முன்னெடுக்கப்படவுள்ளன.

மேற்படி மூன்று தீவுகளிலும் காற்றாலை மற்றும் சூரிய ஒளி மின்சார உற்பத்தித் திட்டங்களே இவ்வாறு இந்தியாவின் உதவியுடன் முன்னெடுக்கப்படவுள்ளன.

இது தொடர்பில் இலங்கை மின்சக்தி அமைச்சருடன் இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே அண்மையில் பேச்சு நடத்தியுள்ளார்.

மேலும், இதற்கான முழுச் செலவான 12 மில்லியன் டொலர்களை இலங்கைக்கு நன்கொடையாக வழங்குவதாகவும் இந்தியத் தூதுவர் அறிவித்துள்ளார்.

அந்தவகையில் மின்சக்தி அமைச்சர் டலஸ் அழகப்பெரும, இந்தியாவின் நன்கொடையுடன் யாழ்ப்பாணத்தில் இந்தக் காற்றாலை மற்றும் சூரிய ஒளி மின்சார உற்பத்தி திட்டத்தை மேற்கொள்வதற்கான அமைச்சரவைப் பத்திரத்தை அடுத்த அமைச்சரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுத்துள்ளார்.

இதுதொடர்பில்தமிழ்ஊடகம்ஒன்றுக்குக்கருத்துவெளியிட்டுள்ள மின்சக்தி அமைச்சர் டலஸ் அழகப்பெரும –

யாழ்ப்பாணம் மக்களுக்குப் போதுமான வகையில் குறைவின்றி மின்சாரத்தை விநியோகிக்க வேண்டும் என்பதே மின்சக்தி அமைச்சர் என்ற வகையில் எனது முழுமையான நோக்கமாக இருக்கின்றது.

அந்த வகையிலேயே ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியுடன் இந்த யாழ்ப்பாணத்தின் அனலைதீவு, நயினாதீவு மற்றும் நெடுந்தீவு ஆகிய பகுதிகளில், காற்றாலை மற்றும் சூரிய ஒளி மூலமான மின்சக்தி திட்டத்தை முன்னெடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

காரணம் தற்போது இந்தத் தீவுகளுக்கு டீசல் மூலம் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்டு வருகின்றது. இது மிகவும் செலவு கூடியதாகும்.

அதனால்தான் இந்தக் காற்றாலை மற்றும் சூரிய ஒளி மூலம் மின்சாரம் உற்பத்தி திட்டத்தை முன்னெடுப்பதற்கு நாங்கள் நடவடிக்கை எடுத்தோம். எனினும், இந்தியா இது தொடர்பில் அக்கறை செலுத்தி இருக்கின்றது.

என்னை அண்மையில் சந்தித்த இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே இந்தத் திட்டத்தை முன்னெடுக்க முழுமையான நிதி செலவான 12 மில்லியன் டொலர்களை இலங்கைக்கு நன்கொடையாக வழங்குவதாக உறுதி அளித்தார்.

இந்தப் பிராந்தியம் குறித்து அக்கறை செலுத்துகின்ற ஒரு மிகப்பெரிய நாடாக இந்தியா உள்ளது. அதுமட்டுமன்றி இந்தியாவானது இலங்கையின் மூத்த அண்ணனாகும்.

எனவே, இந்தியா கூறுகின்ற இந்த யோசனையை நாங்கள் ஏற்றுக்கொள்கின்றோம். இந்தியாவின் இந்த ஆலோசனையை நாங்கள் மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்கின்றோம் – என்றார்.

# தெமட்டகொடவில் கார் கண்ணாடிகளை கொள்ளையிட்டவர் பொலிஸாரால் கைது!



தெமட்டகொட பகுதியில் கார் கண்ணாடிகளை கொள்ளையிட்ட நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித்ரோஹண தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு –

தெமட்டகொட பொலிஸ் சோதனைச்சாவடியில் சந்தேகத்திற்கிடமான சைக்கிள் ஒன்றை அவதானித்துள்ள பொலிஸார் அதனைச் சோதனை செய்துள்ளனர். இதன்போது சைக்கிளில் எடுத்துச் செல்லப்பட்டபை ஒன்றிலிருந்து 16 கார் கண்ணாடி சோடிகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

பஞ்சிகாவத்த பகுதியைச் சேர்ந்த 31 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். கொலன்னாவ பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கார்களின் கண்ணாடிகளே இவ்வாறு கொள்ளையிடப்பட்டிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

கொழும்பு நகரத்தில் இரவு வேளையில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் வாகனங்களின் கண்ணாடிகள் கொள்ளையிடப்பட்டு வருகின்றன என அண்மைக் காலமாகப் பல்வேறு முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன. அதற்கமைய மேற்படி சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளமையுடன், அவரிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

குறித்த சந்தேகநபர் போதைப் பொருள் பாவனைக்கு அடிமையானவர் என்றும் தெரியவந்துள்ளது. அவரை நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தி விளக்கமறியலில் வைக்கவும் பொலிஸார் எதிர்பார்த்துள்ளனர்.

மேற்படி கொள்ளைச் சம்பவம் தொடர்பில் தெமட்டகொட பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி ஆர்.ஏ.எஸ். பெரேராவின் தலைமையின் கீழ் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

# யாழ்.பல்கலையில் கடற்தொழில் கற்கை பீடம் ஆரம்பிக்கப்படுதல் வேண்டும்!

## கலாநிதி எஸ்.ஏ.சூசை ஆனந்தன்



யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் கடற்தொழில் கற்கைகள் பீடம் ஆரம்பிக்கப்பட வேண்டும் அவ்வாறு அமைவதன் மூலம்தான் கடல் வளப்பொருளாதாரம் செழிப்புறும் என கலாநிதி எஸ்.ஏ.சூசை ஆனந்தன் தெரிவித்தார்.

தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில் சிறு மீனவர்கள் தொழில் செய்வதற்கான கொள்கை உருவாக்கம் தொடர்பான கலந்துரையாடல் யாழ்ப்பாணத்தில் முறைசார்ந்த திணைக்கள அதிகாரிகள் பல்கலைக்கழக துறைசார்ந்தோர் கலந்து கொண்டு கருத்துருவாக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில் –

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக கிளிநொச்சி அறிவியல் நகர் வளாகத்தில் மீன்பிடியியல் கற்கைகள் பீடம் ஆரம்பிக்கப்படும் என அண்மையில் அந்த வளாகத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்திருந்தார்.

அதுதொடர்பில் உள்ளூர் பத்திரிகை ஒன்றில் செய்தி வெளியிடப்பட்டது.

பல வருடங்களாகப் பேசு பொருளாக உள்ள கடற்தொழில் கற்கைகள் பீட விவகாரம் தற்போது வெளியில் வந்துள்ளது.

அமரர் பேராசிரியர் துரைராஜா, யாழ்ப்பாணம் பல்கலைக்கழக துணைவேந்தராக இருந்த காலப்பகுதியில் பல்கலைக்கழகத்தில் கடற்தொழில் கற்கைகள் பீடத்தை ஆரம்பிக்க வேண்டும் என முழுவீச்சில் செயற்பட்டார். ஆயினும் அன்றைய காலப்பதியில் இருந்த அசாதாரண அரசியல்சூழல் காரணமாக அந்த முயற்சி தடைப்பட்டுப் போயிற்று.

எவ்வாறாயினும் போர் நிறைவுக்கு வந்து சில வருடங்களின் பின்னர் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக பேரவை உறுப்பினராக இருந்த அமரர், பேராசிரியர் ஹஸ்புல்லாஹ்வின் முயற்சியால் கடற்தொழில் கற்கைகள் பீடம் அமைக்கும் விவகாரம் மீண்டும் அரங்கிற்கு கொண்டுவரப்பட்டது.

அதற்கு என ஒரு குழுவும் நியமிக்கப்பட்டு இது விடயமாக நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டிருந்தது.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக கடற்தொழில் கற்கைகள் பீடத்துக்கு முல்லைத்தீவு மாவட்டத்தில் பொருத்தமான ஓர் இடம் தெரிவு செய்யப்பட்டதுடன், கடற்தொழில் ஆய்வு மையம் ஒன்று இப்பீடத்துடன் இணைந்து மன்னார் மாவட்டத்தில் அமைக்கப்படவேண்டும் என்ற கருத்தும் முன்வைக்கப்பட்டது.

துரதிஷ்டவசமாக பேரவை உறுப்பினர் பேராசிரியர் ஹஸ்புல்லாஹ் 2018ஆம் ஆண்டு காலமாகிவிட்டார். அவரது மறைவுக்குப் பின்னர் கடற்தொழில் பீட விவகாரம் மீண்டும் மறைந்து உறைநிலைக்குப் போனது.

இவ்வாறான நிலையில் கடற்தொழில் அமைச்சர், அறிவியல் நகரில் கடற்தொழில் கற்கைகள் பீடம் மிகவிரைவில் அமைக்கப்படும் என அறிவித்துள்ளார். அவ்வாறாயின் கடற்தொழில் கற்கைகள் பீடம் அமைக்க மிகப்பொருத்தமான இடமாகத் தெரிவு செய்யப்பட்டிருந்த முல்லைத்தீவில் அமையவிருந்த கடற்தொழில் கற்கைகள் பீடம் என்னவாயிற்று?

அதனோடு இணைந்து மன்னாரில் அமையவிருந்த ஆய்வு மையம் என்னவாயிற்று?

வடக்கு மாகாணத்தில் முக்கிய பொருளாதார நடவடிக்கைகளில் ஒன்றாக விளங்குவது மீன்பிடித்துறையே. 2 லட்சத்துக்கும் அதிகமான மக்களின் முக்கிய பொருளாதார நடவடிக்கையாக இது விளங்குகின்றது.

மூன்று பக்கமும் கடலால் சூழப்பட்டுள்ளதுடன் பல உள்ளூர் நீர் ஏரிகளையும் நீர் நிலைகளையும் கொண்டுள்ள இந்தப் பிரதேசத்தில் மீன்பிடி துறை அபிவிருத்தி மிகவும் பின்தங்கிய நிலையிலேயே உள்ளது.

அத்துடன்,ஒருபுறம் இந்திய மீனவர்களாலும் மறுபுறம் தென்னிலங்கை மீனவர்களாலும் வளம் சூறையாடப்பட்டு வருகின்றது.

இவ்வாறான நிலையில் இந்தத் துறைசார் சமூக, பொருளாதார, சுற்றுச்சூழல் அபிவிருத்திக்கு கடற்தொழில் கற்கைகள் பீடம் பொருத்தமான இடத்தில் அமையப் பெறுவது அவசியம்.

மிக அத்தியாவசியமாக அமையவேண்டிய கடற்தொழில் கற்கைகள் பீடம் இதுவரையில் வெறும் பேசுபொருளாகவே இருந்து வருகின்றமை நல்லதல்ல.

தொடர்ந்தும் தீண்டப்படாத துறையாக இருந்து வருமா அல்லது மீண்டெழுந்து வருமா? கடற்றொழில் பீட கனவு நனவாகி பின்தங்கிய மாவட்டங்கள் விருத்தி பெறவேண்டும். எமது கடல் வளப்பொருளாதாரமும் செழிப்புற வேண்டும். இதுவே எமது அவா பொறுத்திருந்து பார்ப்போம். – என்றார்.

## ஜெனிவாவைக் கையாள...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஏனைய உறுப்பு நாடுகளுடனும் கலந்துரையாடி, தமிழ் மக்களின் பிரச்சினைகளை எடுத்துக் கூறுவதற்கு 7 பேர் கொண்ட குழு நியமிக்கப்பட்டுள்ளது.

இரா.சம்பந்தன் அல்லது அவரது பிரதிநிதி ஒருவர், சி.வீ.விக்னேஸ்வரன், த.சித்தார்த்தன், மாவை சேனாதிராஜா, சுரேஷ் பிறேமச்சந்திரன், எம்.கே.சிவாஜிலிங்கம், அனந்தி சசிதரன் ஆகியோரை உள்ளடக்கியே இந்தக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, தமிழ்த் தேசியக் கட்சிகள் சார்பில் ஊடகங்களுடன் பேச, விடயங்களைக் கையாள சுரேஷ் பிறேமச்சந்திரனும், சி.வீ.கே.சிவஞானமும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

நேற்றைய கூட்டத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பில் அதன் தலைவர் மாவை சேனாதிராஜா மற்றும் சீ.வீ.கே.சிவஞானம், தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி சார்பில் அதன் தலைவர் சி.வீ.விக்னேஸ்வரன், புளொட் சார்பில் முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன், சுன்னாகம் தவிசாளர் தர்ஷன், ஈ.பி.ஆர்.எல்.எவ். சார்பில் அதன் தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரன், தமிழ் தேசியக் கட்சி சார்பில் அதன் தலைவர் என்.சிறிகாந்தா மற்றும் பொதுச்செயலாளர் எம்.கே.சிவாஜிலிங்கம், ரெலோ சார்பில் விந்தன் கனகரட்ணம், தமிழ் தேசிய பசுமை இயக்கம் சார்பில் பொ.ஐங்கரநேசன் மற்றும் ஜனநாயகப் போராளிகள் மற்றும் அனந்தி சசிதரன் தலைமையிலான கட்சியினர் கலந்துகொண்டனர்.

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியிலிருந்து எவரும் நேற்றைய கூட்டத்தில் பங்கேற்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## வடக்குக்குள் சீனக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உருவாக்கியுள்ளதுடன் அமைச்சரவை அனுமதி பெறப்பட்டு வர்த்தமானியும் வெளியிடப்பட்டுள்ளது.

இந்தநிலையில், அவ்வாறான ஒரு விடயம் நடக்குமாக இருந்தால், சீனக் கம்பனிகளை ஒட்டுமொத்தமாக தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை என்பதை இலங்கை அரசுக்குப் பத்து தமிழ் கட்சிகளும் இணைந்து வலியுறுத்துகின்றன.

இதேவேளை, தமிழ் மக்களுக்கு இலங்கை அரசால் ஏற்படுத்தக்கூடிய அடக்குமுறைகளுக்கு எதிராக தமிழ் மக்களுக்குத் தொடர்ந்து குரல் கொடுக்க வேண்டிய தேவைகளைக் கவனத்தில் கொண்டு தமிழர்களின் இருப்பு, பாதுகாப்பை முன்னிலைப்படுத்தி செயற்படுவதற்காகத் தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒன்றிணைந்து செயற்படுவது என இன்று (நேற்று) நடைபெற்ற கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

அதற்கமைய பத்துக் கட்சிகள் சார்பாக நடவடிக்கைக் குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது. இந்தக் குழு, தமிழ் மக்களுக்கு எதிராக அரசால் முன்னெடுக்கப்படுகின்ற செயற்பாடுகளுக்குத் தேவையான நடவடிக்கைகளை முன்னெடுக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இந்தக் குழுவின் இணைப்பாளர்களாக சி.வி.கே.சிவஞானம் மற்றும் எம்.கே.சிவாஜிலிங்கம் ஆகியோர் செயற்படவுள்ளார்கள் – என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# வட., கிழக்கு தொல்பொருள் அகழ்வாராய்ச்சிக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை அரசியல்வாதிகள் தவிர்க்கவேண்டும்!

## அமைச்சர் விதுர விக்ரமநாயக்க தெரிவிப்பு

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் முன்னெடுக்கும் தொல்பொருள் அகழ்வாராய்ச்சிப் பணிகளுக்கு எதிராக இனவாதம் மற்றும் மதவாத கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன.

இதற்கு ஒருபோதும் அடிபணிய மாட்டோம். பிற இனத்தவர்களின் உரிமைகளை முடக்குவது தொல்பொருள் அகழ்வாராய்ச்சியின் நோக்கமல்ல என தேசிய மரபுரிமைகள், கலை கலாசார அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் விதுர விக்ரமநாயக்க தெரிவித்தார்.

தேசிய மரபுரிமைகள் ,கலைகலாசார அலுவல்கள் அமைச்சில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் -

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் அண்மைக் காலமாக முன்னெடுக்கப்படும் அகழ்வாராய்ச்சி பணிகள் தொடர்பாக அரசியல்வாதிகள் இனவாதம் மற்றும் மதவாதம் ஆகிய கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளார்கள்.

நாட்டின் தேசிய மரபுரிமைகளைப் பாதுகாக்கும் நோக்கில் தொல்பொருள் அகழ்வாராய்ச்சிப் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

முழு நாட்டிலும் தொல்பொருள் மரபுரிமைகள் காணப்படுகின்றன என சான்றாதாரங்களில் குறிப்பிடப்படுகின்றன.

அனைத்து இன மக்களின் மரபுரிமைகளும் அனைத்து பகுதிகளிலும் மறைந்துள்ளன. அவற்றைப் பாதுகாப்பதே தேசிய மரபுரிமைகள் அமைச்சின் நோக்கமாகும்.

ஆகவே, அரசியல் நோக்கங்களைக் கொண்டு தொல்பொருள் அகழ்வாராய்ச்சிக்கு எதிராகக் குற்றச்சாட்டுக்களை முன்வைப்பதை அரசியல்வாதிகள் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

நாட்டில் பல்லின மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். ஓர் இனத்தின் மதம் மற்றும் கலை, கலாசார மரபுரிமைகளை



முடக்குவது தொல்பொருள் அகழ்வாராய்ச்சியின் நோக்கமல்ல.

அரசியல்வாதிகளே தேவையில்லாத பிரச்சினையைத் தோற்றுவித்துள்ளார்கள். ஏதேனும் பிரச்சினைகள் காணப்படுமாயின் அவற்றுக்குப் பேச்சின் ஊடாகத் தீர்வைப் பெற்றுக் கொள்ள முடியும்.

குறுகிய நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு அரசியல்வாதிகளால் முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களுக்கு அடிபணிந்து தொல்பொருள் அகழ்வாராய்ச்சி பணிகளை இடைநிறுத்தப் போவதில்லை.

வடக்கில் முன்னெடுக்கப்பட்ட அகழ்வராய்ச்சிப் பணிக்கு எதிராக ஒரு தரப்பினர் நீதிமன்றம் செல்வதாகக் குறிப்பிட்டுள்ளார்கள். அனைத்து சவால்களையும் சட்டத்தின் ஊடாகவும் வெற்றிக் கொள்ள முடியும்.

வறுமை, தொழிலின்மை, உள்ளிட்ட பிரச்சினைகள் நாட்டில் அனைத்து மக்கள் மத்தியிலும் காணப்படுகிறது.

இந்தப்பிரச்சினை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்துக்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டதல்ல. வடக்கு மக்களுக்கு மாத்திரம் தனிப்பட்ட பிரச்சினைகள் ஏதும் கிடையாது.

இப்பிரதேச மக்கள் நாளாந்த வாழ்க்கையில் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை போன்றே பிற மாகாண மக்களும் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கிறார்கள்.

அனைத்து இன மக்களும் பொருளாதார மட்டத்தில் முன்னேற்றமடைந்தால் தேவையற்ற பிரச்சினைகள் தோற்றம் பெறாது. மக்கள் சுயமாக முன்னேற்றமடையும் சூழலை அரசாங்கம் ஏற்படுத்தும். - என்றார்.

# கொரோனா சடலங்கள் அடக்க வர்த்தமானி வெளியிடுவதில் ஆளும் கட்சிக்குள் முரண்!

கொவிட் தொற்றால் உயிரிழப்பவர்களின் சடலங்களை அடக்கம் செய்வது தொடர்பான வர்த்தமானி அறிவித்தலை வெளியிடுவதில் ஆளுங்கட்சிக்குள் முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன. வைரஸ் தொற்றால் உயிரிழப்பவர்களின் சடலங்களை அடக்கம் செய்வதற்கு அனுமதியளிப்பதாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கடந்த புதன்கிழமை நாடாளுமன்றத்தில் அறிவித்தார்.

எனினும் வியாழக்கிழமை நடைபெற்ற நாடாளுமன்ற அமர்வுகளின்போது –

'கொவிட் தொற்றால் உயிரிழக்கும் முஸ்லிம்களின் சடலங் களை அடக்கம் செய்வதில் தொழிநுட்ப குழுவின் தீர்மானமே இறுதியானது.' – என்று ஆரம்ப சுகாதார சேவைகள், தொற்று நோய்கள் மற்றும் கொவிட் நோய்க் கட்டுப்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் சுதர்ஷனி பெர்னாண்டோ புள்ளே பிரதமரின் வாக்குறுதியை நிராகரித்து மாற்றுக் கருத்தை முன்வைத்தார்.

இதேவேளை, ஆளுங்கட்சியின் பின் வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட பொது ஜன பெரமுனவிலுள்ள பலரும் பிரதமரின் இந்த அறிவிப்பு தொடர்பில் மாறு பட்ட கருத்துக்களையே முன்வைத்து வருகின்றனர்.

இந்நிலையில் அடுத்த வாரம் ஆரம்பமாகவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை மற்றும் பாகிஸ் தான் பிரதமர் இம்ரான் கானின் இலங்கை வருகை என்பவற்றை மையமாகக் கொண்டு கொரோனா சடலங்கள் தொடர்பான சர்ச்சைக்கு சிறந்ததொரு தீர்வு வழங்கப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

எதிர்வரும் 22 ஆம் திகதி பாக்கிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ள நிலையில், ஐக் கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் முஸ்லிம் நாடுகளின் ஆதரவை இலங்கை பெற்றுக் கொள்வதற்கான பேச்சுகள் இடம்பெறும் என்று கூறப்படுகிறது. இதனை இலக்காகக் கொண்டதாகவே பிரதமரின் அறிவிப்பு அமைந்திருந்தது என்று கூறப்பட்ட போதிலும், தற்போது இந்த விடயத்தில் ஆளுந் தரப்பிற்குள்ளேயே இரு வேறு நிலைப்பாடுகள் தோன்றியுள் ளன.

எவ்வாறிருப்பினும் கலந்துரையாடல்கள் உள்ளிட்டவற்றினூடாக பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கானின் இலங்கை விஜயத்துக்கு முன்னராகவே சடலங்களை அடக்கம் செய்வதற்கான வர்த்தமானி அறிவித்தலை வெளியிடுவதில் அரசாங்கம் தீவிர முயற்சியை முன்னெடுத்து வருகிறது.


**காணி விற்பனைக்கு**

பருத்தித்துறை நகருக்கு அண்மையில் தும்பளை வீதியில் உட்புறமாக 2.5 பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு.

**0774366704, 0771066112**

Anna EXPRESS Courier Services

அண்ணா விரைவும் பொதிகள் சேவை

3-6 நாட்கள்

077 8889388
075 3305500
070 3305500

லண்டன் ⇨ 1000/=

15,000 /= பெறுமதி வரை காப்புறுதி இலவசம்

லண்டன்,பிரான்ஸ்,ஜேர்மனி உட்பட 20 நாடுகளுக்கு மேலதிக கட்டணமாக வரிகள் ஏதும் இல்லை

உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் பெற்றுக்கொள்ளப்படும். (யாழ் மாவட்டம் முழுவதும்)

எம்முடன் இணைந்து உங்களிடத்தில் பொதிகள் சேவை தொடங்குவதாயின் தொடர்புகொள்ளவும்

யாழ்ப்பாணம் | சங்கத்தானை | கனகராயன்குளம்
சங்கானை | பளை | மல்லாவி
கல்வியங்காடு | கிளிநொச்சி | மன்னார்
ஆவரங்கால் | புதுக்குடியிருப்பு | வவுனியா
நெல்லியடி | முல்லைத்தீவு | கொழும்பு

CNR world wide Express
Courier & Cargo
International Courier & Cargo Service.

உள்நாடு, வெளிநாடுகளுக்கான அதிவேக, மிதவேக தபால், பொதிகள் பரிமாற்று சேவை.

அனுப்பும் பொதிகளுக்கான காப்புறுதி உத்தரவாதம்.

கடல் ஆகாய மார்க்க பெரிய சரக்கு பரிமாற்று சேவை.

வீடு, அலுவலகங்களில் இருந்தவாறு அனுப்பும் வசதி.

அனுப்பும் பொதிகளை இணையத் தளத்தில் கண்காணிக்கும் வசதி.

இல. 401, மணிக்கூட்டு கோபுரவீதி, (பெருமாள் கோவில் அருகாமை) யாழ்ப்பாணம்.

Tel - 021 567 4145
Mob - 077 2931062

All BRANDS OF LCD/ LED TV REPAIR & SERVICES

NORTH LEAD Technologies (Pvt) Ltd
vision of Technologies

Computer & Accessories Wholesaler,
Computer Repairing & Services
CCTV & Security System, Mobile Phone Accessories
Laptop Accessories for Sales
Desktop Accessories for Sales
www.northlead.lk

LAPTOP Repair
We have laptop Repair Specialists for you
ASUS acer lenovo hp SONY DELL
Board level Repair
Hinge Repair
Parts Replacement
Software Installation

www.northlead.lk
#253, Stanley Road, Jaffna Town
077 253 3390


இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 15.02.2021 இல் வெளியிடப்பெற்றது.